தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 10 இதழ் : 4 பிப்ரவரி 2014




**"...நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே."**

(எபிரெயர் 10 : 23)

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

# 23.2.2014 அன்று பிறந்த நாள் காணும்

## பேராயர் தேவதாஸ் அவர்கள்



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

2014 பிப்ரவரி 23 ஆம் தேதியன்று என்னுடைய வாழ்வில் 54 ஆண்டுகளை நிறைவுச் செய்ய தேவன் கிருபைச் செய்கிறார். அவருக்கே துதி, கனம், மகிமையைச் செலுத்துகிறேன்.

எனக்கு ஜீவன் தந்து, இரட்சித்து, அபிஷேகித்து, ஊழிய அழைப்பையும் நல்ல இல்லற வாழ்வையும் தந்து, ஒரு ஜாதி பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக உருவாக்கிய திரியேக தேவனுக்கு நன்றியைச் செலுத்தி எனது வாழ்வில் இனிவரும் காலம் முழுவதும் அவருக்காகப் பணிபுரிய என்னை அர்ப்பணிக்கின்றேன். மேலும் எனக்காகவும், எனது குடும்பம் மற்றும் ஷாலோம் ஊழியங்களுக்காகவும், விசேஷமாக எனது பிறந்த நாளில் அனைவரும் ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன்.

**Rt. Rev. Dr. V. தேவதாஸ்**

**"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்;
நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி,
உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்......." எரே. (1:5-)**

## ஷாலோம் தலைமை & கிளை அலுவலக ஊழியர்களின் குடும்ப ஆசீர்வாதக் கூடுகை

கடந்த 2.1.2014 அன்று மாலை 5 மணிக்கு தூத்துக்குடி பெல் ஹோட்டலில் வைத்து, நமது ஷாலோம் தலைமை அலுவலக மற்றும் கிளை அலுவலக ஊழியர்களுக்கான புத்தாண்டு குடும்ப ஆசீர்வாதக் கூடுகை நடைபெற்றதில் அனைத்து ஊழியர்களும் குடும்பத்துடன் கலந்துக் கொண்டார்கள். இக்கூட்டத்தில் பாடல் ஆராதனை முடிந்ததும் சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தளத்தில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்றப் பணித்தள ஊழியங்களைக்குறித்து விளக்கிக் கூறினார்கள். 2020 ஆண்டு தரிசனத் திட்டங்களை நிறைவேற்ற அர்ப்பணிப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, நம் பிஷப். V. தேவதாஸ் அவர்கள் யோவேல் : 2 : 21 ஆம் வசனத்தின் அடிப்படையில் வாக்குத்தத்த செய்தியைப் பகிர்ந்துக் கொண்டது அனைத்து ஊழியர்களுக்கும் மிக ஆசீர்வாதமாக இருந்தது. பின் அனைவருக்கும் அன்பின் விருந்து கொடுக்கப்பட்டது. தேவனுக்கே மகிமை!



# உங்கள் சகோதரனிடமிருந்து



***ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.***

தேவக்கிருபையினாலும் உங்கள் அனைவரின் ஜெபங்களினாலும் உதாரத்துவமான காணிக்கைகளினாலும் பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் புத்தாண்டிற்கான விசேஷித்த ஊழியர், ஊழியக்காரிகள், பணித்தள அலுவலர்கள், மற்றும் தலைமை அலுவலக ஊழியர்களின் அனைத்துக் கூடுகைகளைத் தேவன் அபரிவிதமாக ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

கடந்த டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனைகள், கிறிஸ்துமஸ் மேளா, கீதப்பவனி மற்றும் கிறிஸ்துமஸ் புத்தாண்டு ஆராதனைகள் மிகச் சிறப்பாக 3 மாநிலங்களிலும் நடைப்பெற தேவன் கிருபைத் தந்ததோடு கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான அனைத்துத் தேவைகளையும் தேவன் சந்தித்தார். ஜெபித்து உற்சாகத்துடன் தந்த உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக!

குறிப்பாக கிறிஸ்துமஸ் புத்தாண்டு நாட்களில் சுமார் 3000 வேதப்புத்தகங்களை குறைந்த விலையில் வாங்கி விசுவாசிகளுக்கு வழங்குவதற்கு தேவன் கிருபைச் செய்தார். உற்சாகமாக கொடுத்த தேவப்பிள்ளைகள், சபைகள், ஊழியங்கள் போன்றவைகளுக்காகத் தேவனைத் துதிக்கிறோம். இன்னும் இவ்வருடத்தில் 5000 வேதப்புத்தகங்கள் வழங்குவதற்காகவும், ஜெபித்துத் தாங்குங்கள்.

இந்த வருடம் கர்த்தருக்குச் சித்தமானால் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட ஜெபித்து செயல்படுகிறோம். அதற்காகக் குறைந்தது **ரூ. 200 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. கர்த்தர் ஏவினால் நிதி உதவி செய்து தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்ட முன் வாருங்கள்.

இந்த மாதத்தில் நடைபெறவுள்ள மூப்பர்கள் கூடுகை, திருச்சபை வளர்ச்சிக்கான சிறப்புக் கூடுகைகள், சிறப்புப் பெண்கள் கூடுகைக்களுக்காக ஜெபியுங்கள். நம் தேசத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காகவும் நம் பாரத தேசத்திற்காகவும் அனுதினமும் ஜெபியுங்கள். நாங்களும் உங்கள் அனைவருக்காகவும் ஜெபித்து வருகிறோம்.


**"...என் குமாரனாகிய தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய் என்றான்..."**

(1 சாமுவேல்: 26 : –25–) என்ற வசனத்தின்படி கர்த்தர் தாமே பெரியக் காரியங்களைச் செய்ய உங்களை பயன்படுத்துவாராக! ஆமென்.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**“அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்–கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ள–வராயிருக்கிறாரே”.** எபிரெயர் 10:23

பிரியமானவர்களே புதிய ஆண்டில் இரண்டாவது மாதத்தைக் காணும்படியாகத் தேவன் கிருபைச் செய்தபடியால் தேவனைத் துதிப்போம். புதிய ஆண்டில் தேவனிடத்திலிருந்து வாக்குத்தத்தங்களைத் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம் மற்றும் சபை ஊழியங்களுக்கும் தேவன் கொடுத்திருக்கிறார். ஒரு மாதமாகிவிட்டது, ஏன் இன்னும் வாக்குத்தத்தம் நிறைவேறவில்லை என நம்மில் பலர் அங்கலாய்க்கலாம். வேதம் சொல்லுகிறது, **“வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார்”** எபிரெயர் 10:23. தேவன் சொன்னால் சொன்னதுதான். அவர் வாக்குத்தத்தங்களின் தேவன், இஸ்ரவேலின் ஜெயபலமானவர், பொய்ச் சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல (Iசாமு. 15:29) என்று வேதம் சொல்லுகிறது. அவர் சொன்னதைக் கட்டாயம் நிறைவேற்றுவார். எண்ணாகமம் 23:19–ஐ வாசித்துப்பாருங்கள். **“பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?”.**

ஆகவே பிரியமானவர்களே, மனம் சோர்ந்துப் போகவேண்டாம். அவர் உங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களைக் கட்டாயம் நிறைவேற்றுவார். ஏனெனில் அவர் உண்மையுள்ளத் தேவனாக இருக்கிறார். அப்படியானால் வாக்குத்தத்தங்கள் நிறைவேற நாம் என்னச் செய்யவேண்டும். தேவன் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்? என்பதைக் காண்போம்.

முதலாவதாகப் பெற்றுக்கொண்ட வாக்குத்தத்தங்களை நம்முடைய நம்பிக்கையாகக் கொண்டு அனுதினமும் அறிக்கைச் செய்வோம். எபிரெயர் 10:23 இல் எழுதியபடி வாக்குத்தத்தங்களை நம் நம்பிக்கையாக ஏற்று அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கவேண்டும். தினமும் நாம் ஜெபிக்கும்போது வாக்குத்தத்தங்களை நம் மனதில் எப்பொழுதும் நினைத்து நாவினால் அறிக்கையிடவேண்டும். நம் நாவில் நம்பிக்கை அற்றுப்போகும் வார்த்தைகளை அறிக்கையிடக்கூடாது. ஆதியாகமம் 32:12–ஐ வாசித்துப்பாருங்கள், **“தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப் போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே”.** என்று யாக்கோபு முற்பிதாக்களுக்குச் சொன்ன வாக்குத்தத்தத்தைச் சொல்லி ஜெபிக்கிறார்.

எண்ணாகமம் 13 ஆம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவன் கானான் தேசத்தை வாக்குப்பண்ணினார். அதை வேவுப் பார்க்க சென்ற 12 பேரில் 10 பேர்கள் தேசத்தைக் குறித்து துர்ச்செய்தியைப் பரப்பினார்கள். ஆகையால் அவர்களை எதிர்க்க நம்மாலே கூடாது, நம்மை விட பலவான்கள், எல்லாரும் பெரிய ஆட்கள், இராட்சசப் பிறவிகள், நாம் வெட்டுக்கிளிகள் என தவறான செய்தியை அறிக்கைச் செய்து தேவ ஜனங்களைப் பின் வாங்க வைத்தார்கள்.

ஆனால் யோசுவாவும், காலேப்பும் அது பாலும், தேனும் ஒடுகிற தேசம். உடனே போய் சுதந்தரித்துக் கொள்ளலாம், நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என நாவினால் நல்ல விசுவாச அறிக்கையைச் செய்தார்கள். (எண்.13:30) வேதம் சொல்லுகிறது, துர்ச்செய்தியை ஏற்று அறிக்கைச் செய்த எகிப்து தேச அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்ட 6 இலட்ச புருஷர்கள் ஒருவரும் கானான் தேசத்தில் பிரவேசிக்கவில்லை. அதன் பலனை புசிக்கவுமில்லை.

எனக்கன்பானவர்களே, தேவன் வாக்குத்தத்தத்தைக் தரும்போது நம்முடைய நம்பிக்கையாக எற்றுக்கொண்டு அனுதினமும் விசுவாச அறிக்கை செய்வோம். அப்பொழுது நாமும், வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வோம்.

இரண்டாவதாக, எபிரெயர் 10:36 வாசித்துபாருங்கள், "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது". தேவனுடைய வாக்குத்தத்தத்தை பெற்றுகொள்ளும்படியாக அவருடைய சித்தத்தைச் செய்யும்படியாக மட்டும் அல்ல, வாக்குத்தத்தத்தைப் பெறும்படி பொறுமையாக இருக்கும்படியும் அழைக்கப்பட்டிருக்கிறோம். யோசேப்பு வாழ்க்கையைக் கவனித்துப் பாருங்கள். தேவன் அவனுக்கு வாலிபனாய் இருக்கும்பொழுது சொப்பனத்தைக் கொடுத்தார். ஆனால் தன் சகோதரரால் வெறுக்கப்பட்டு பெற்றோரைப் பிரிந்து அடிமையாய் விற்கப்பட்டு செய்யாத பாவத்திற்கு சிறைச்சாலையில் தண்டணையை அனுபவித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவருடைய வாழ்விலே தேவன் தந்த தரிசனத்தை நிறைவேற்ற உண்மையுள்ளவர் என்று எண்ணி நீடியப்பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தப்படியால் தீமையான யாவற்றையும் நன்மையாகப் பெற்றுக்கொண்டார்.

அதைப்போல தாவீதின் வாழ்க்கையை கவனித்துப் பாருங்கள், தீர்க்கதரிசியான சாமுவேல் பெத்தேலுக்கு வந்து ஈசாயின் வீட்டில் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். ஆனால் அடுத்த நாளிலே தாமே அவர் ராஜாவாக அரண்மனையில் வீற்றிருக்கவில்லை, எத்தனை பாடுகள், நிந்தைகள், போராட்டங்களை சந்திக்க நேர்ந்தது. பல வருடங்கள் தன் வாழ்க்கையில் கர்த்தரையே நம்பி, நேசித்து அவருடைய வாக்குத்தத்தத்தை உறுதியாக நம்பி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தைப் பொறுமையாக சுதந்தரிந்துக் கொண்டார்.

34 வருடங்களுக்கு முன்பாக கர்த்தர் என்னைப் பேர்ச்சொல்லி அழைத்து, ஒரு ஜாதி மக்களைத் தருவேன் என்று தீர்க்கதரிசனமாக அழைப்புக் கொடுத்தார். 28 வருடங்களுக்கு முன்பாக திருமணமான முதல் வாரத்தில் பீல் மக்களை தரிசனமாகக் காட்டி, இன்று நடக்கும் அற்புத ஊழியங்களை முன் அறிவித்தார். இன்றைக்கு ஷாலோம் திருமண்டலமாக தேவன் அவர் நாமத்தின் மகிமைக்காக எழுப்பியிருக்கிறார். ஆனால் ஊழியத்தின் பாதையில் ஒவ்வொரு வருடமும் அநேகப் பாடுகள், கஷ்டங்கள் வழியாக நீடிய பொறுமையுடன் கடந்து சென்றோம். "... இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்". என்ற வசனத்தின்படி பலனைப் பெற்றுக்கொள்ளும் வரைப் பொறுமையுடன் காத்திருப்போம்.

கடைசியாக எபிரெயர் 10:38இன் படி "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற வசனத்தின்படி வாக்குத்தத்தங்களை நம்முடைய நம்பிக்கையாய் அறிக்கை செய்வது மட்டும் அல்லாமல் அவை நிறைவேறும்வரை நீடியபொறுமையுடன் காத்திருப்போம். அதோடு, வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ளும்படி பூரணமாக விசுவாசிக்கவேண்டும். நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாம் எப்படி விசுவாசித்தாரோ, அப்படியே நாமும் விசுவாசிப்போம். ஆபிரகாம் தன்னுடைய சரீரம் 100 வயதாகி செத்துப்போனதையும், தன் மனைவி சாராளின் கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்தான் என்று ரோமர்4:19 இல் வாசிக்கிறோம். ஒருவேளை நம்முடைய வாழ்க்கையிலும், ஊழியத்தின் பாதையிலும் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில், எல்லாம் கூடும் என்று விசுவாசிக்கும்போது நாம் வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை சுதந்தரிந்துக் கொள்கிறோம். லாசரு மரித்து 4 நாட்கள் ஆகிவிட்டபோதும், மரியாளை நோக்கி, **நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்** என்று **இயேசு** சொன்னார். அவரிடத்திலிருந்து மரித்தோரை உயிரோடு எழுப்பும் வல்லமை புறப்பட்டு அற்புதங்களை செய்ததுபோல, இன்றைக்கும் தேவன் கொடுத்த **வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கும்போது அற்புதங்களைக் காண்பீர்கள்.** நீங்கள் மகிழ்ந்து களிகூரும்படி கர்த்தர் பெரியக் காரிங்களைச் செய்வார்.

`ôúXôm 24 U ¦ úSW Ne¡-j ùRôPo ù_Tm

நாள் : **22.02.2014 (சனிக்கிழமை)**



நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள்**
**அதிகாலை 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

**நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.**

## `ôúXôm ÑúRN F¯Vo ©W§xûP BWôRû] (12.01.2014)

ஷாலோம் ஊழியங்களைக் கர்த்தர் தொடர்ந்து ஆசீர்வதித்து வருகிறார். கடந்த **12.1.2014** அன்று ஞாயிறு காலையில் திருச்சியிலுள்ள All Nations Christian Worship Centre - இல் வைத்து ஊழியப் பிரதிஷ்டை நடைபெற்றது. காலை நடந்த ஆராதனையில் நம் **பிஷப். V. தேவதாஸ்** அவர்கள் **"இந்த நாள் நற்செய்தியை அறிவிக்கும் நாள்"** என்ற தலைப்பின் கீழ் **2** இராஜாக்கள் : **7** : **9** வசன அடிப்படையில் தேவச் செய்தியைக் கொடுத்தார். செய்தியைக் கேட்ட அனைவரும் ஆவியில் நிறைந்து ஆத்துமபாரம் கொண்டனர். மேலும் தலைமை அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் பீல் மக்களின் மத்தியில் நடைபெறும் ஊழியங்களைக்குறித்து **Video Presentation** செய்தார்கள்.

இதன்பின்பு, இந்த சபைப் போதகர் **Pr. ரூபஸ் ராஜரத்தினம்** அவர்களின் தலைமையில் ஜெபித்து இராஜஸ்தானிலிருந்து வந்திருந்த சுதேச ஊழியர் **சகோ. கேசவ்லால் மக்வானா** என்பவர் மிஷனெரியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இவரை ஒவ்வொரு மாதமும் ஜெபித்துத் தாங்கும் All Nations Christian Worship Centre சபைப் போதகர் **Pr. ரூபஸ் ராஜரத்தினம்** (திருச்சி) அவர்களை தேவன் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக. மட்டுமல்ல, அன்று மாலை நடைப்பெற்ற கூட்டத்திலும் **பிஷப்.V. தேவதாஸ்** அவர்கள் கலந்துக்கொண்டு **"சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான்"** என்ற தலைப்பின் கீழ் ஏசாயா : **60** : **22** வசன அடிப்படையில் தேவச் செய்தியளித்தார். துதி கனம் மகிமை அனைத்தையும் கர்த்தருக்கே செலுத்துகிறோம்.

## úTôRLoLÞdLô] £\l×d áÓûL UÕûW (09.01.2014)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. கர்த்தரின் மாபெரும் தயவால், கடந்த **9.1.2014** இல் மதுரை, அழகர் நகர், K. புதூரிலுள்ள நல்ல சமாரியன் திருச்சபையில் மதுரை ஊழியர் ஐக்கியக் கூட்டம் நடந்தது. இதில் மதுரை மற்றும் பல ஊர்களிலிருந்தும் முழு நேர ஊழியர்கள் **300** க்கும் மேல் கலந்துக்கொண்டனர்.

காலை **10** மணிக்குத் தொடங்கப்பட்ட இந்த ஆராதனையை **Pr. டட்லி தங்கையா** தலைமை தாங்கி நடத்தினார்கள். நம் தலைமை அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் பீல் மக்கள் மத்தியில் நடக்கும் ஊழியங்களைக்குறித்து Viedeo Presentation செய்தார்கள்.

நமது ஷாலோம் **பேராயர். V. தேவதாஸ்** அவர்கள் **தரிசனம்** என்ற தலைப்பில் தேவச் செய்தியளித்தார்கள். இந்த செய்தியைக் கேட்ட அனைத்து ஊழியர்களும் ஆவியில் நிறைந்து, மிஷனெரிப் பாரம் கொண்டனர்.

இந்த போதகர் ஐக்கியக்கூட்டத்திற்கு அன்போடு அழைத்து பேராதரவுடன் பயன்படுத்திய **பேராயர். ஜோசப் பாலசந்திரன்** அவர்களுக்கும் **மதுரை போதகர் ஐக்கியத்திற்கும்** ஷாலோம் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு, அவர்கள் செய்துவரும் மகத்தான ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதிப்பாராக!

(புகைப்படங்கள் 10 ஆம் பக்கத்தில்)



# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்

**நாம் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு தேவனுடையத் திட்டங்கள் மகத்துவமானவைகள்.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்து, சாராயத்தை காய்ச்சி குடித்தும் கொண்டிருந்த பீல் மக்கள். மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 23 ஆண்டுகளில் 500 க்கும் மேற்பட்ட பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 600 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபைத் தந்தார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

கடந்த ஆண்டு 6000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். தேவக்கிருபையினால் சுமார் 3000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபை தந்தார்.

குறிப்பாக மத்தியப்பிரதேச ஊழியர் கூடுகையில் 75 போதகர்களுக்கும், இராஜஸ்தான் ஊழியர் கூடுகையில் 60 போதகர்களுக்கும், வழங்க தேவன் கிருபை தந்தார். இராஜஸ்தானில் கும்புரா மற்றும் குஜராத்தில் தெல்சர், பாட்டன்பூரா, மத்தியப்பிரதேசத்தில் தலையா, காக்ரதார கிராமங்களில் நாங்கள் குடும்பமாக விநியோகம் செய்ய தேவன் கிருபைச் செய்தார். பாரத்தோடு நிதி உதவி செய்த உங்கள் யாவருக்கும் எங்கள் நன்றி!

இன்னும் இவ்வருடம் 5000 வேதப்புத்தகங்கள் குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். 1 வேதப்புத்தகத்தின் விலை ரூ. 100/- வீதம் 5000 வேதப்புத்தகங்கள் வாங்கி விசுவாசிகளுக்கு விநியோகம் செய்ய பாரமுள்ளவர்கள் தேவை. காடுகளில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**“கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்” சங் : 126 : 5**

---

**“கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது”....** (சங்கீதம் 19:7)

# பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி





CDC ஜெரி சிறுவர்களுக்கு பயிற்சியளிக்கும் – சகோ. டைட்டஸ் & சகோதரி மெர்லின்



தங்களது படைப்பாற்றலை வெளிப்படுத்தும் சிறுவர்கள்



பரிசுகள் வழங்குதல்

# ஷாலோம் மிஷனெரிப் பிரதிஷ்டை – 12.01.2014

**சகோ. கேசவ்லால் மக்வானா,** (தமீர்புரா, இராஜஸ்தான்) Sponsor : All Nations Church, திருச்சி



மிஷனெரிப் பிரதிஷ்டை வேளை



மிஷனெரிக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகள்

# போதகர்கள் கூடுகை, மதுரை 09.01.2014



மூத்த போதகர்கள் மற்றும் தலைவர்களுடன் செய்தி & ஜெபவேளையை ஏறெடுக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



கூடியிருந்த போதகர்கள்

# பீல் ஆதிவாசி சிறுவர்களின் கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சிகள்



வரவேற்பு நடனம் – ஜெரி



சிறப்பு நடனம் – அந்தர்வேலியா



கிறிஸ்துமஸ் செய்தியளிக்கும் பிஷப் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்



கிறிஸ்துமஸ் நடனம் – ஹிரோலா



புத்தாடைகள் வழங்குதல்



கிறிஸ்துமஸ் கேக் வெட்டுதல் – சகோ. டைட்டஸ் & சகோதரி மெர்லின்



கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் – நமது குஜராத் ஊழியர்களின் பிள்ளைளுக்கு



புத்தாடைகளுடன் நமது பிஜல்பூர் பள்ளி மாணவர்கள்

# குஜராத் மாநிலத்தில் கிறிஸ்துமஸ் மேளா



பிஷப் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் இருவருக்கும் வரவேற்பு



சகோ. டைட்டஸ் மற்றும் சகோதரி மெர்லின் டைட்டஸ் இருவருக்கும் வரவேற்பு



கிறிஸ்துமஸ் சிறப்புச் செய்தி : பிஷப் தேவதாஸ் அவர்கள்



கிறிஸ்துமஸ் தாத்தாக்களின் சிறப்பு நடனம்



சிறுவர் சிறுமிகளின் சிறப்பு நடனம்



கலாச்சார நடனம்



கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த சிறப்பு நாடகம்



கூடியிருந்த தேவ ஜனங்கள்

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட வேதாகமங்கள்





மத்தியப்பிரதேசம் ஊழியர்களிடம் ஜெபித்து வேதாகமங்கள் வழங்கப்பட்டபோது



மத்தியப்பிரதேசம் ஊழியர் கூடுகையில் வேதாகமங்களை வழங்கும்
சகோ. டைட்டஸ் மற்றும் சகோதரி. மெர்லின்



தெல்சர் குஜராத், கிராம சபையில் வேதாகமங்களை வழங்கும்
சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்





மத்தியப்பிரதேசம், தலையா கிராம சபையில் வேதாகமங்களை ஜெபித்து வழங்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



கும்புரா, இராஜஸ்தான் கிராம சபைக்கு வேதாகமங்கள்



இராஜஸ்தான் ஊழியர்களுக்கு வேதாகமங்கள்

# தேவனுக்கே மகிமை!

## Àp B§Yô£ UdL° u Uj§«p SûPùTßm
## 2013 Bm B i¥tLô] `ôúXôm T¦ jR[ F¯V A±dûL

**"உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்"** என்று ஏசாயா 44 : 3 இல் சொல்லப்பட்ட வாக்குதத்தத்தின்படியே, 2013 ஆம் வருட ஊழியத்தில் தேவன் தம்முடைய ஆவியினால் மக்களை நிரப்பி, ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினாலும் எல்லா நன்மைகளினாலும் திருப்தியாக்கினார்.

### I. சிறப்புக் கூடுகைகள் (Special Meetings)

**1. ஊழியர் கூடுகை** (Sevak Meeting)

2013 ஜனவரி 7 முதல் 12 வரை குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் சுதேச ஊழியர்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் Project ஊழியர்களின் குடும்பங்களுக்கென்று புதிய வருட சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது. வாக்குத்தத்தச் செய்தியைக் கொடுத்து, ஜெபித்த போது ஆவியானவர் அபரிவிதமாய் இறங்கி வந்தார். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் தவறாமல் ஊழியர்களின் கூட்டத்தை நடத்தத் தேவன் கிருபைச் செய்தார். குஜராத் மற்றும் மத்தியப்பிரதேச ஊழியர்களுக்கு தாகோத் பயிற்சி மையத்திலும், இராஜஸ்தான் ஊழியர்களுக்கு கோய்க்கா மற்றும் செவனியா பகுதிகளிலும் கூட்டம் நடைபெற்றது. ஊழியர்கள் உற்சாகமாய் பங்குபெற்று, ஆடிப்பாடி தேவனை ஆராதித்து ஒவ்வொரு மாதமும் புதிய வல்லமையைப் பெற்றார்கள்.

**2. வட்டாரத் தலைமை ஊழியர்கள் கூடுகை** (Area Leaders Meeting)

மூன்று மாநிலங்களிலுமுள்ள மூத்த ஊழியர்கள் அதாவது தலைமை ஊழியர்களை அவ்வப்போது சந்தித்து, ஊழியங்களைக் குறித்துக் கலந்தாலோசித்து ஒவ்வொரு காரியங்களையும் திட்டமிட்டு செயல்படுத்த தேவன் கிருபைச் செய்தார்.

**3. பணித்தள அலுவலக ஊழியர்கள் கூடுகை** (Field Office Staff Meeting)

ஒவ்வொரு மாதமும் பணித்தள அலுவலக ஊழியர்களுக்கென்று கூட்டம் நடத்தப்பட்டு, அதில் அந்தந்த மாதத்திற்குரிய ஊழியத் திட்டங்கள் விவரிக்கப்பட்டு, விசேஷ ஜெபங்களும் ஏறெடுக்கப்பட்டது. மட்டுமல்லாமல், அனுதினமும் காலை 9.30 மணிக்கு அலுவலக ஊழியர்களுக்குக் காலைத் தியான ஜெபம் தொடர்ந்து நடைபெற்றது.

**4. Project ஊழியர்கள் கூடுகை** (Project Staff Meeting)

மாதந்தோறும் 30 ஆம் தேதி குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து, குஜராத் ஹிரோலா & ஜெரியிலுள்ள CDC ஊழியர்கள் மற்றும் மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியாவிலுள்ள CDC ஊழியர்கள் அனைவருக்கும் விசேஷக் கூட்டம் நடத்தப்பட்டது.

**5. தலைமை ஊழியர்கள் மனைவிமார் கூடுகை** (Evangelists' Wives Leaders Meeting)

2013 ஜனவரி மாதம் 26,28,29 ஆகிய தேதிகளில் தலைமை ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று சிறப்பு அபிஷேகக் கூட்டம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் முதல் நாள் தாகூத் பயிற்சி மையத்தில் 150 ஊழியக்காரிகள் உபவாசத்தோடு வந்து இந்தக் கூட்டத்தில் பங்குப் பெற்றார்கள். பாடல், ஆராதனை, சாட்சிகள், மற்றும் சிறப்புச் செய்தியும், விசேஷ ஜெபமும் ஏறெடுக்கப்பட்டது. **சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ்** அவர்கள் இந்தக் கூட்டத்தினைப் பொறுப்பாக நடத்தி வருகிறார்கள்.

**6. ஊழியக்காரிகளுக்கான பகுதிவாரியான கூட்டம்** (Area wise Sevikaben Meeting)

2013 ஆம் ஆண்டில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 467 ஊழியர்களின் மனைவிமார் அனைவரையும் சந்தித்து, அந்தந்த மாநிலங்களில் 4 இடங்களில் கூட்டங்களை நடத்தினார்கள். மூத்த ஊழியக்காரிகள் தலைமையில் அந்தந்தப் பகுதிகளில் உள்ள மற்ற ஊழியர்களின் மனைவிமார்களுக்கு சுமார் 30 இடங்களில் கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

**7. சபை விசுவாசப் பெண்கள் கூடுகை** (Church Believers Ladies Meeting)

போதகர்கள் மற்றும் சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் தங்கள் சபைகளில் மாதந்தோறும் விசுவாசிப் பெண்களுக்கென்று கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். இதில் 1 கோடி பீல் மக்களின் இரட்சிப்பிற்காகப் பாரத்தோடும் கண்ணீரோடும் ஆவியில் நிறைந்து ஜெபிக்கிறார்கள்.

மேலும் பயிற்சிப் பெற்ற 150 மூத்த ஊழியக்காரிகளை 50 குழுக்களாகப் பிரித்து 600 ஷாலோம் திருச்சபையில் அனைத்து விசுவாசிப் பெண்களுக்கு விசேஷச் கூட்டங்களை நடத்தினார்கள். இதில் தேவன் அற்புத சாட்சிகளை எழுப்பினார், சபையின் பெண்கள் ஆவியில் பெலப்பட்டார்கள்.

**8. ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்கள் கூடுகை** (Sunday Class Teachers Meeting)

கடந்த ஜனவரி 19,20,27 தேதிகளில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள ஞாயிறுப் பாடசாலை ஆசிரியர்கள் சுமார் 347 பேர்களுக்கு விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. ஞாயிறுப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆசிரியர்கள், ஞாயிறுப் பாடசாலை மாணவர் வருகைப் பதிவேடு (Attendance Register) மற்றும் காணிக்கைப் பெட்டியையும் கொண்டு வருவார்கள். இவர்களுக்கு ஒவ்வொரு முறையும் விசேஷ அபிநயப் பாடல் (Action Song) மற்றும் வேதபாடக் கதைகள், மனப்பாட வசனம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மட்டுமல்லாமல் இவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாய் சிறிய காணிக்கையும் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**9. 10 லட்ச ஆத்தும அறுவடைத் திட்ட ஊழியர் கூடுகை (One Million Soul Winning Project Sevak Meeting)**

இந்தத் திட்டத்திற்கென்று சிறப்புப் பயிற்சிப் பெற்ற 48 ஊழியர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் சிறப்புக் கூட்டம் தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டங்களில் அந்த 48 ஊழியர்களும் வந்து தேவன் பணித்தளங்களில் செய்த அற்புதங்களைக் குறித்துச் சாட்சிக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். பின்பு அடுத்த மாத சுகமளிக்கும் கூட்டங்களைக் குறித்துக் கலந்தாலோசித்து நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

## II. ஜெப ஊழியங்கள் (Prayer Ministries)

**1. சங்கிலித் தொடர் ஜெபம்** (Chain Prayer)

நம்முடைய ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்பமாகத் தினமும் ஒரு ஊழியர் குடும்பம் தாகோத் பயிற்சி மையத்தில் உள்ள சிறு அறையில் தொடர்ச்சியாக ஜெபித்து வருகிறார்கள். இதில் ஜெபக்குறிப்புகளும், தாலுகா மற்றும் கிராமங்களின் பெயர்களை வைத்தும் கருத்தாய் சொந்த ஜனம் இரட்சிக்கப்பட ஜெபித்து வருகிறார்கள்.

**2. அந்நிய பாஷை ஜெபம்** (Tongues Prayer)

ஊழியக்காரிகள் மாதத்திற்கு ஒருமுறை அதாவது முதல் வாரத்தில் 3 மாநிலங்களிலும் 8 இடங்களில் அந்தந்தப் பகுதிகளில் கூடி 3 மணி நேரம் அந்நியப் பாஷை ஜெபத்தினை ஏறெடுத்து வருகிறார்கள். இதில் அநேகர் தரிசனங்களைக் காண்கிறார்கள். இது நமது தரிசனப்பணியில் இன்னும் முன்னேரிச் செல்ல உற்சாகமளிப்பது மட்டுமல்லாமல், ஊழியக்காரிகள் தங்கள் சபைகளில் உள்ள மூப்பர்களின் மனைவிமார்களுடன் இணைந்து மாதந்தோறும் 1 மணி நேரம் அந்நிய பாஷை ஜெபம் செய்கிறார்கள்.

**3. பெண்களுக்கான உபவாச ஜெபம்** (Ladies Fasting Prayer)

சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் அந்தந்தப் பகுதி வாரியாகப் பிரிக்கப்பட்டு, 7,7 நாட்கள் முறையே வருடம் முழுவதும் தொடர் உபவாச ஜெபம் செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 1 நாள், 3, 21, 40 நாட்கள் என்று பிரித்தும் உபவாசம் செய்து சொந்த ஜனம் இரட்சிக்கப்படும்படி ஜெபித்து வருகிறார்கள்.

**4. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான முழு இரவு ஜெபம்** (All Night Prayer)

ஒவ்வொரு மாதமும் ஆண்கள், பெண்கள் முறையே மாதத்திற்கு ஒருமுறை தாகோத்தில் வைத்து நடத்தப்பட்டு வரும் முழு இரவு ஜெபத்தில் பணித்தள அலுவலர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் பங்கெடுக்கிறார்கள். இதில் 1 கோடி பீல் மக்கள் சந்திக்கப்படும்படியாய் பாரத்தோடு ஜெபிக்கிறார்கள்.

**5. தொலைபேசி ஜெப ஊழியம்** (Telephone Prayer Ministries)

தொலைபேசி மூலம் விசுவாசிகள் இரவும், பகலும் ஜெபத்திற்காக தொடர்புக்கொள்ளுகிறார்கள். தேவன் தொலைபேசி ஜெபத்தைக்கேட்டு மக்களுக்கு சுகத்தைக் கட்டளையிடுவதோடு, நோய்களிலிருந்து விடுதலை அடைகிறார்கள். விசேஷமாக பாம்பு கடித்து ஜெபிக்கிறவர்களும் அதிகம். தேவன் அவர்களை உடனடியாக விடுவிக்கிறார். பீல் சுதேச ஊழியர்களும் கூட தங்கள் சபையின் விசுவாசிகளுக்குத் தொலைபேசி மூலம் ஜெபிக்கிறார்கள்.

**6. 40 நாள் உபவாச ஜெபம்** (40 Days Fasting Prayer)

லெந்து நாட்களில் சபையார் யாவரும் 40 நாட்கள் உபவாச ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள். கூலி வேலை செய்கிறவர்களும் கூட மிகுந்த உற்சாகமாய் உபவாசித்து ஜெபம் செய்கிறார்கள். இந்த 40 நாட்களும் சபையில் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு நாள் என்று தொடர் உபவாச ஜெபம் செய்து வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு வெள்ளியும் சபையார் அனைவரும் சேர்ந்து உபவாச ஜெபம் ஏறெடுக்கிறார்கள்.

**7. பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம்** (Special Prayer for Exam Students)

3 மாநிலங்களிலும் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கென்று பிப்ரவரி மாதம் 10 மற்றும் 17 தேதிகளிலும், மார்ச் மாதம் 13 ஆம் தேதியும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் சுமார் 900 க்கும் அதிகமான மாணவ மாணவிகள் கலந்துக் கொண்டு ஜெபித்துச் சென்றார்கள். இதில் **சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோதரி. மெர்லின் டைட்டஸ்** இருவரும் தங்கள் அனுபவங்களிலிருந்து ஆலோசனைகளை வழங்கினார்கள். கலந்து கொண்ட பிள்ளைகள் **"எங்களுக்கு இருந்த தேர்வைக் குறித்த பயம் நீங்கி நாங்கள் தைரியம் பெற்றோம்"**

என சாட்சி பகிர்ந்து கொண்டார்கள். பின்பு ஜெபித்து பேனா, வசன ஸ்டிக்கர், மற்றும் சாக்லேட் என அன்பளிப்புகளுடன் உணவும் வழங்கப்பட்டது. இதன் விளைவாக இந்த மாணவர்கள் 70,80,90 சதவீத மதிப்பெண்களைப் பெற்று பலதரப்பட்ட உயர்க் கல்வியில் சேர்ந்துப் படித்து வருகிறார்கள்.

## III. பயிற்சிகள் (Trainings)

**1. புதிய சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி** (New Evangelist Training)

கடந்த ஆண்டு சுமார் 25 புதிய ஊழியர்களுக்கு 1 மாத ஊழியம் மற்றும் வேதாகமப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் யாவரும் புதிய கிராமங்களிலிருந்து வந்தவர்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்யத் தங்களை அர்ப்பணித்து, பயிற்சிப் பெற்று புதிய சபைகளை உருவாக்கி வருகிறார்கள். ஊழியர்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார்.

**2. சிறுவர் வேதாகமப் பள்ளி ஆசிரியர் பயிற்சி** (CBC) Children Bible Class Teachers Training

கடந்த ஆண்டு, சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC) இயக்குநர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விசேஷப் பயிற்சிக் கொடுக்கப்பட்டது. இதில் சுமார் 1000 பேர்களுக்கு 10 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டது. **"என் நண்பன் இயேசு"** என்ற தலைப்பில் பாடங்கள், கதைகள், பாடல்கள், குறுநாடகங்கள் போன்றவைகள் கற்றுக் கொடுக்கப்பட்டது. பயிற்சிப் பெற்றவர்கள் சபைகளில் சென்று 30,000 சிறுவர்களுக்கு CBC வகுப்புகளை நடத்தினார்கள். விசுவாசிகளல்லாத குடும்பத்தின் சிறுவர்களும் அநேகர் இதில் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். சபையின் மூப்பர்கள் சிறுவர்களுக்கு சிற்றுண்டி மற்றும் சாப்பாடு கொடுத்து சிறுவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

**3. சபை மூப்பர்களுக்கான சீஷத்துவப் பயிற்சி** (Bild Training (T3)

சபையின் மூப்பர்களுக்கு சபை வளர்ச்சி மற்றும் சபையின் ஒழுங்குகள் குறித்து விசேஷ பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 223 இளைய ஊழியர்கள் மற்றும் மூப்பர்களுக்கு 4 நாட்கள் சீஷர்களை உருவாக்குதல் என்ற தலைப்பில் 6 பிரிவாகப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. இந்த 223 பேரும் தலா 5 பேரை சீஷர்களாக உருவாக்கியுள்ளார்கள். ஆக மொத்தம் 1115 பேர் இந்தப் பயிற்சியின் மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பயிற்சிகள் அனைத்தையும் **சகோ. ஜெயராஜ்** மற்றும் **சகோ. கேரட்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள். இந்த Bild Training பயிற்சித் திட்டங்கள் Bless India **(Dr. N. எமில் ஜெபசிங்)** ஸ்தாபனத்தின் மூலமாக நடத்தப்பட்டது.

**4. மாணவர்களுக்கான வழிகாட்டும் பயிற்சி** - Career Guidance Training

2013 இல் Career Guidance Training குஜராத்தில் ஹிரோலாவிலுள்ள C.D.C. மற்றும் ஜெரி மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் மொத்தம் 215 பிள்ளைகள் கலந்துக் கொண்டார்கள். இந்தப் பயிற்சியினை **Prof. ஜார்ஜ் குரியன்** (ஆல்ஃபா சபை, பரோடா) அவர்கள் 9 பேர் கொண்ட குழுவுடன் வந்து நடத்தினார்கள். இந்தப் பயிற்சி **சகோ. கிளாட்சன் டைட்டஸ்** அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இதில் Learning Skill, முதலுதவி, கவனிக்கும் திறன் (Observation Power) அனைத்தும் கற்றுக்கொடுக்கப்பட்டன. பிள்ளைகள் ஒரு தெளிவான அறிவைப் பெற்றார்கள்.

அதனைத் தொடர்ந்து அந்தர்வேலியாவிலுள்ள 280 CDC பிள்ளைகளுக்கு **சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோதரி. மெர்லின் டைட்டஸ்** இருவரும் இணைந்து 15.10.13 அன்று Career Building Programme ஐ நடத்தி, மாறுபட்ட விளையாட்டுகள் மூலம் கற்றுக் கொடுத்து பிள்ளைகளின் அறிவுத் திறனைப் பெருகச் செய்தார்கள். தேவனுக்கே மகிமை.

**5. ஆங்கிலப் பயிற்சி** (English Coaching Class)

ஷாலோம் பணித்தள அலுவலர்கள், Project பணியாளர்கள், பிஜல்பூர் பள்ளிக்கூட ஆசிரியர்கள் சேர்ந்து சுமார் 126 பேருக்கு ஆங்கிலப் பயிற்சி நடத்தப்பட்டது. இதை சென்னை கிறிஸ்தவக் கல்லூரி ஸ்கூல் பிரின்சிபால் அவர்கள் ஒழுங்கு செய்து 4 ஆசிரியைகளான **சகோதரி. அனிதா, சகோதரி. கிறிஸ்டியானா, திருமதி. கிறிஸ்டினா பிரின்ஸ்** மற்றும் **திருமதி. பியூலா** ஆகியோரை அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அன்பாகப் பழகி மிகவும் புரிந்துக் கொள்ளும் அளவிற்கு நன்றாக 7 நாட்கள் ஆங்கிலப் பயிற்சியைக் கற்றுக் கொடுத்தார்கள். இதனால் ஆங்கிலத்தின் அடிப்படை அறிவைக் கற்றுக் கொண்டு பல வார்த்தைகளை ஆங்கிலத்தில் பேசக்கூடிய அளவிற்கு முன்னேறியுள்ளார்கள்.

### IV. சிறப்பு முகாம்கள் (Special Camps)

**1. சிறுவர் முகாம்** (Children Camps)

2013 அக்டோபர் மாதத்தில், 4 வயது முதல் 12 வயது வரையுள்ள நமது விசுவாசி சிறுவர்களுக்கு விசேஷித்த சிறுவர் முகாம் 5 இடங்களில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 1373 பிள்ளைகள் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். சிறுவர்கள் பாடல்களைப் பாடி ஆடி உற்சாகத்தோடு தேவனை ஆராதித்தார்கள். இந்த ஆராதனையில் அநேகர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள். **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்கள் ஆராதனையைப் பொறுப்பாக நடத்தினார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் யோவான் 14 : 14 இன் படி ஜெபமே ஜெயம் என்ற தலைப்பில் ஜெபத்தைப் பற்றி செய்தி கொடுத்து தானியேலைப் போல 3 வேளையும் ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்கள். ஜெபத்தைப் பற்றி குழுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டதால் பிள்ளைகளின் ஜெப வாழ்க்கை மாறியது. மற்றும் தானியேலைக் குறித்த குறு நாடகம் பிள்ளைகளின் உள்ளத்தில் பதிந்து விட்டது. பிள்ளைகள் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார்கள். Puppet Show, Bible Quiz போன்ற நிகழ்சிகள் நடத்தப்பட்டு பதிலளித்த பிள்ளைகளுக்கு சிறு பரிசுகள் வழங்கப்பட்டது.

**2. வாலிபர் முகாம்** (Youth Camp)

2013 செப்டம்பர் மாதத்தில் வாலிபர்களுக்கென்று விசேஷித்த 8 முகாம்கள் தாகோத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதில் சுமார் 1700 வாலிப சகோதர சகோதரிகள் பங்குப் பெற்றார்கள். **"எனது எதிர்காலம் இயேசுவுக்கே"** என்ற தலைப்பின் கீழ் இந்த முகாம்கள் நடத்தப்பட்டது. **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்கள் துதி ஆராதனை மற்றும் கருப்பொருளுக்கு ஏற்றவாறு விசேஷித்த பாடல்களை செய்கையுடன் நடத்தினார்கள். மேலும் **"திரும்பி வா தூரம் போகாதே நீ"** என்ற தலைப்பின் கீழ் Choreography நடத்தப்பட்டது. தொடர்ந்து குழு கலந்துரையாடல் மூலம் 12 சிறு குழுக்களாகப் பிரித்து வேத வசனங்களை விளக்கிக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

பயிற்சி மைய ஊழியர்கள் அனைவரும் இணைந்து யோசேப்பின் வாழ்க்கையில் தேவன் அவனை உயர்த்தின விதத்தைக் குறுநாடகமாக நடத்தினார்கள். **சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ்** அவர்கள் இந்த முகாமைப் பொறுப்பேற்று நடத்தியதுடன் 2 செய்திகளையளித்து இறுதியில் பிள்ளைகளை இரட்சிப்பு, விடுதலை, அபிஷேகம் மற்றும் அர்ப்பணிப்புக்குள் நடத்தினார்கள். தேவனுக்கே மகிமை.

**3. மூப்பர்களின் முகாம்** (Elders Camp)

கடந்த ஆண்டு செப்டம்பரில் 3 மாநிலங்களிலும் சேர்த்து சுமார் 13 இடங்களில் 600 சபைகளில் மூப்பர்களுக்கென்று விசேஷக் கூட்டங்களை **பிஷப். தேவதாஸ்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள். ஒவ்வொரு சபையிலிருந்தும் 3 முதல் 5 மூப்பர்கள் வீதம் சுமார் 4000 மூப்பர்கள் பங்குப் பெற்று அபிஷேகத்தினால் நிரம்பி வல்லமையைப் பெற்றுக் கொண்டார்கள். 1 மணி நேரம் சொந்த ஜனம் இரட்சிப்பிற்காக ஆத்துமப் பாரம் பெற்று, பாரத தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், சபை எழுப்புதலுக்காகவும் ஜெபித்து சபையின் போதகர்களுக்கு துணையாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

**4. CDC ஊழியர் முகாம்** (CDC Staff Camp)

22-10-2013 அன்று 3 CDC Project களிலிருந்தும் இயக்குநர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள் என மொத்தம் 35 பேர்களுக்கு விசேஷமான ஆவிக்குரிய கூட்டம் தாகோத் மையத்தில் வைத்து நடைபெற்றது. இந்த நாளில் ஆசிரியர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை தேவன் கொடுத்தார். **சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து 2 செய்திகளையளித்தார்கள். ஜெப வேளையில் வந்திருந்தவர்களில் ஒரு சிலர் தவிர மற்ற யாவரும் அபிஷேகம் பெற்று அந்நிய பாஷையில் பேசத் தொடங்கினார்கள். எல்லோரும் சிறு பிள்ளைகள் மீது பாரம் கொண்டவர்களாய் அவர்களுக்காக அழுது ஜெபித்தார்கள்.

**5. மருத்துவ முகாம்கள்** (Medical Camps)

கடந்த ஆண்டு ஷாரோன் நினைவு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டதால், மருத்துவ முகாம் தாகோத் சென்டரில் நடைபெற்றது. சுமார் 600 பேர் முகாமில் கலந்து கொண்டு சுகம் பெற்றார்கள். மேலும் CDC Jeri Project மாணவர்களுக்கு **டாக்டர். பிரேமா கிறிஸ்டோபர்** (பாளையங்கோட்டை) அவர்கள் மருத்துவச் சிகிச்சையளித்தார்கள்.

## V. சபையின் செயல்பாடுகள் (Church Activities)

**1. ஞாயிறு ஆராதனைகள்** (Sunday Services)

ஷாலோம் ஊழியத்தில் தேவன் கொடுத்த அனைத்துச் சபைகளிலும் வாரந்தோறும் ஒழுங்காக ஞாயிறு ஆராதனை நடைபெறும்படியாகத் தேவன் கிருபைச் செய்தார். போதகர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் இந்த ஆராதனையைப் பொறுப்போடு நிறைவேற்றினார்கள்.

**2. ஞானஸ்நான ஆராதனை** (Baptism Service)

கடந்த வருடத்தில் மூன்று மாநிலங்களிலும் சுமார் 7000 புதிய விசுவாசிகள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

**3. திருவிருந்து ஆராதனை** (Holy Communion Service)

திருவிருந்து ஆராதனை ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் நடத்தப்பட்டு வருகிறது. Ordained பண்ணப்பட்ட போதகர்கள் இதை நடத்துகிறார்கள். இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**4. ஞாயிறுப் பள்ளி** (Sunday School)

347 ஷாலோம் சபைகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் சிறுவர்களுக்கென்று ஞாயிறுப் பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. இதனைப் பயிற்சிப் பெற்ற வாலிபர்கள் பொறுப்பாக நடத்தி வருகிறார்கள். மற்றும் 3 மாநிலங்களிலும் இவ்வூழியத்தைக் கண்காணிக்க மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த சிறுவர் ஊழியத்தின் மூலம் குஜராத்தில் 70 சபைகளில் 3191 பிள்ளைகளும், மத்தியப்பிரதேசத்தில் 128 சபைகளில் 5976 பிள்ளைகளும் இராஜஸ்தானில் 149 சபைகளில் 6580 பிள்ளைகளும், ஆக 337 சபைகளிலும் சேர்த்து மொத்தம் 15747 பிள்ளைகள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர்.

**5. சிறுவர் வேதாகமப் பள்ளி** (Children Bible Class (CBC))

2013 ஆம் ஆண்டில் **"என் நண்பன் இயேசு"** என்ற தலைப்பில் மே மாதம் 10 நாட்கள் CBC வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 600 கிராமங்களிலிருந்து 30,000 பிள்ளைகள் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். இதில் கிராமங்களில் உள்ள விசுவாசிகள் அல்லாத குடும்பத்தில் உள்ள பிள்ளைகளும் வந்து, பங்குப் பெற்று, இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இதற்காக தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்.

**6. துதி ஆராதனை** (Praise & Worship Service)

இரண்டு மாதத்திற்கொருமுறை 70 சுதேச ஊழியக்காரிகளாகக் கூடி தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை தொடர்ந்து 5 மணி நேரம் துதி ஆராதனை நடத்தினார்கள். இதில் நடனமாடித் தேவனை துதித்து, ஆவியில் நிறைந்து தேவனை ஆராதிப்பதைப் பார்த்தபோது பரலோகமே இறங்கி வந்தது போன்ற ஒரு அனுபவம் கிடைத்தது. இந்த ஆராதனையில் சிலர் அற்புத சுகம் பெற்று, ஆவியில் ஊற்சாகமடைந்து தரிசனங்களையும், தீர்க்கதரிசன வரங்களையும் பெற்றார்கள்.

## VI. விழாக்கள் (Festivals)

**1. ஷாலோம் ஊழிய தினம்** (Shalom Mission Day)

ஜுலை 15 ஆம் தேதி மாலை 3 மணிக்கு ஷாலோம் ஊழியம் 22 ஆம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக் கூடுகையை ஆசரிக்க தேவன் கிருபைச் செய்தார். அந்த நாள் கூடுகையில் ஷாலோம் ஸ்தாபனத்தின் மூத்த போதகர்கள் 100 பேர் குடும்பமாகக் கலந்து கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். இந்த நிறைவு விழாவில் **Prof. C.S. கிறிஸ்டோபர்** (பாளை) அவர்கள் குடும்பமாகப் பங்குப் பெற்று விசேஷ செய்தியளிக்க **சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ்** அவர்கள் அந்தச் செய்தியை மொழிப் பெயர்த்தார்கள். ஊழியர்கள் யாவரும் ஆவியில் உற்சாகமடைந்து, விசேஷ ஊழியப் பாரத்தைப் பெற்று தேவனுக்காக பெரியக் காரியங்களைச் செய்யும்படியான தீர்மானத்தோடு திரும்பினார்கள்.

**2. ஷாலோம் மிஷன் ஞாயிறு** (Shalom Mission Sunday)

கடந்த அக்டோபர் 7,14,21 ஆகிய தேதிகளில் மத்தியப்பிரதேசம், குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் முறையே SLM Mission Sunday நடைபெற்றது. விசுவாசிகள் மிகவும் உற்சாகமாய்

காணிக்கையைச் செலுத்தினார்கள். 2013 இல் அனைத்து சபைகளும் கொடுத்த காணிக்கையின் மொத்தம் ரூ. 22 இலட்சம் ஆகும். சொந்த ஜனம் இயேசுவை அறிய வேண்டும் என்றும், ஷாலோம் ஊழியம் வளர்ந்து பெருக வேண்டும் என்றும், காணிக்கையைக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதிலிருந்து எருசலேமில் இயேசு அழைக்கிறார் ஜெபக் கோபுர கட்டுமானப் பணிக்காக ரூ. 2 இலட்சம் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது.

**3. ஷாலோம் அற்புதத்தின் நாள்** (Shalom Miracle Day)

2013 ஆம் ஆண்டில் செப்டம்பர் 27 ஆம் தேதியன்று ஷாலோம் அற்புதத்தின் நாள் நடைபெற்றது. எல்லா சபைகளிலும் தேவன் அற்புதங்களைச் செய்தார். மேலும் புதிய ஆத்துமாக்களும் பங்குப் பெற்று சுகம் பெற்றார்கள். **பிஷப். தேவதாஸ்** அவர்களும், சகோதரி. Dr. **வஹிதா தேவதாஸ்** அவர்களும் ஜெபித்து, ஜெப எண்ணெயை ஊழியர்களுக்குக் கொடுத்து அனுப்பினார்கள். ஊழியர்கள் வியாதியஸ்தர்கள் மீது எண்ணெய் பூசி ஜெபித்தார்கள். அந்த நாளில் சுமார் 4000 க்கும் அதிகமான அற்புதங்களைத் தேவன் செய்தார்.

**4. ஷாலோம் திருமண்டல நாள்** (Shalom Diocese Day)

கடந்த நவம்பர் 20 ஆம் தேதி ஷாலோம் திருமண்டல நாள் ஆகும். அன்று ஊழியர் குடும்ப முகாம் நடந்து கொண்டிருந்தபடியால் ஊழியர் குடும்பங்கள் இணைந்து ஷாலோம் திருமண்டலத்திற்காக தேவனைத் துதித்து ஜெபித்தார்கள்.

**5. சிறுவர் ஞாயிறு** (Children Sunday)

கடந்த மே மாதம் 19 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையை அனைத்து சபைகளிலும் சிறுவர் ஞாயிறாகக் கொண்டாடினார்கள். இந்த நாளில் ஆரம்ப ஜெபம், ஆராதனை, வேத வாசிப்பு, செய்தி வேளை என முழு பொறுப்புகளையும் சிறுவர்களே ஏற்று நடத்தினார்கள். மேலும் மனப்பாட வசனங்கள், Action Songs குறு நாடகம் போன்றவைகளை நடத்திக் காட்டி பரவசப்படுத்தினார்கள்.

**6. அறுப்பின் பண்டிகை** (Harvest Festival)

கடந்த நவம்பர் மாதம் 3 மாநிலங்களிலும் அறுப்பின் பண்டிகை கொண்டாடப்பட்டது. விளைவின் முதற்பலனிலிருந்து தசமபாகமாக, தானியங்களை ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொண்டு வந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**7. புனித வெள்ளி, கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள்** (Good Friday & Easter)

லெந்து நாட்களில் சபை மக்கள் 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்தார்கள். பெரிய வியாழன் அன்று திருச்சபைகளில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. புனித வெள்ளியன்று ஆலயத்திற்குச் சென்று இயேசுவின் பாடு மரணத்தைக் குறித்து தியானித்து இயேசுவின் உயிர்தெழுதலை உண்மையாய் உணர்ந்து மகிழ்ச்சியோடு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளை எல்லா சபைகளிலும் கொண்டாடினார்கள்.

**8. ஷாலோம் போதகர்கள் & சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம்** (Shalom Family Conference)

2013 ஆம் ஆண்டில் ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் குஜராத்தில் ஆனந்த் பட்டணத்தில் உள்ள பெராக்கா மையத்தில் நவம்பர் 18 முதல் 21 வரை மிக ஆசீர்வாதமாக நடைபெற்றது. ஊழியர்களும் ஊழியக்காரிகளும் சேர்ந்து சுமார் 1100 பேர்கள் பங்குப் பெற்றார்கள். இவர்களுக்கு உணவு, உடை உறைவிடம் மற்றும் கூட்ட ஒழுங்குகள் சிறப்பாகச் செய்யப்பட்டது.

இம்முகாமில் பாளையங்கோட்டையிலுள்ள துதியின் கோட்டை சபையின் தலைமைப் போதகர். **Rev. Dr. ரத்தினம் பால்** அவர்கள் மற்றும் **சகோ. ஜட்சன் ஆபிரகாம், சகோதரி. ப்ரீத்தா ஜட்சன்** (Gift of Jesus Ministries, Warangal) மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர் **சகோ. ஜெபசிங், சகோ. ஜான் வெஸ்லி, சகோ. ஜோசுவா** அவர்கள் சிறப்புச் செய்தியாளர்களாகவும், **பாஸ்டர். டேனியல்** (மும்பை) அவர்கள் ஆராதனை நடத்தும்படியாக 5 பேர்கொண்ட குழுவாகவும் வருகை தந்திருந்த விருந்தினர்களான இவர்களுக்கு கலாச்சார வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இந்த முகாமில் கலை நிகழ்ச்சிகள், பாடல்கள், நாடகம் போன்றவற்றை **Dr. வஹிதா தேவதாஸ்** அவர்களும் **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்களும் பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் பயிற்சி குழுவினர் அனைவரும் ஒருங்கிணைந்து மிகவும் நேர்த்தியாய் நடத்திக் கொடுத்தார்கள். இம் முகாமில் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் வல்லமையாக ஊற்றப்பட்டது. ஊழியர்கள் அனைவரும் புதிய தரிசனங்களோடும், புதிய பெலத்துடனும் பணித்தளங்களுக்குச் சென்றனர். இந்த முகாமிற்கான முழுப் பொறுப்பையும் ஏற்று நிதி உதவி தந்து நடத்திய **இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காக** தேவனைத் துதிக்கிறோம்.

**9. சிறுவர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்** (Children Christmas Celebration)

கிறிஸ்துமஸ் பண்டிகைக் கொண்டாட்டங்கள் டிசம்பர் மாதம் 7,8,14,15,18,19 ஆகிய தேதிகளில் குஜராத்தில் ஹிரோலா, ஜெரி கிராமங்களிலும், மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியா கிராமத்திலும், இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்திலும், மேலும் C.N.I. ஆலய வளாகத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றன.

ஆறு இடங்களில் நடைபெற்ற இந்தக் கொண்டாட்டங்களில் CSP பெண்களுக்கும் 3045 க்கும் அதிகமான பிள்ளைகளும் இந்த கிறிஸ்துமஸ் விழாவில் பங்குப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இவற்றில் **பிஷப். தேவதாஸ், Dr. வஹிதா தேவதாஸ், சகோ. ஜெயராஜ், சகோ. டைட்டஸ்** ஆகியோர் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டானர். மேலும் கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை நாடகமாக நடத்திக் காண்பிக்கப்பட்டது. விசேஷமாய் கிறிஸ்து எல்லாருடைய உள்ளங்களிலும் பிறக்க வேண்டும் என்று செய்தியளிக்கப்பட்டது. இந்தச் செய்தியின் மூலம் எல்லாப் பிள்ளைகளுடைய உள்ளங்களிலும் இயேசு பிறந்து விட்டார் என்பது தான் இந்த விழாவின் வெற்றியாகும். தேவனுக்கே மகிமை.

**10. கிறிஸ்துமஸ் புத்தாடை வழங்குதல்** (Christmas Dress Distribution)

நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசிப் பிள்ளைகள் மற்றும் நமது ஊழியர்களின் பிள்ளைகள் 2007 பேருக்கும், Compassion என்ற திட்டத்தின் மூலம் தாங்கப்பட்டு வருகிற CDC பிள்ளைகள் 711 பேருக்கும், CSP திட்டத்தின் கீழ் பயன் பெற்று வரும் 105 பெண்களுக்கும் சேர்த்து மொத்தம் 2823 பேருக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டது. நமது ஷாலோம் ஊழியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் மொத்தம் 572 குடும்பத்திற்கும் கிறிஸ்துமஸ் புத்தாடைகள் வழங்கப்பட்டது. அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**11. கிறிஸ்துமஸ் கீத பவனி** (Christmas Carol Rounds)

டிசம்பர் மாதம் முழுவதும் ஊழியர்கள் தங்கள் சபைகளில் உள்ள விசுவாசிக் குடும்பங்களின் வீடுகளைச் சந்தித்து கீதப் பவனி சென்று கிறிஸ்துமஸ் பாடல்களை நடனத்துடன் ஆடிப்பாடி வாழ்த்துதல் கூறி தேவனை மகிமைப்படுத்தினது மட்டுமல்லாமல், புற ஜாதியாருக்கும் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபைச் செய்தார்.

**12. கிறிஸ்துமஸ் நற்செய்தி மேளா** (Christmas Function)

டிசம்பர் 20 ஆம் தேதி குஜராத்தில் உள்ள அனைத்து சபைகளுக்கும் ஒரு கிறிஸ்துமஸ் மேளா வாணியவாவ் என்ற கிராமத்தில் பெரிய அளவில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 2000 மக்கள் கூடினார்கள். மிகவும் நேர்த்தியாய் ஆராதனையை **Dr. வஹிதா தேவதாஸ்** அவர்களும் **சகோ. ஃப்ராங்க்ளின்** அவர்களும் நடத்தினார்கள். மக்கள் நடனமாடி தேவனை ஆராதித்தார்கள். தொடர்ந்து **பிஷப். தேவதாஸ்** அவர்கள் கிறிஸ்துமஸ் சிறப்புச் செய்தியளித்தார்கள். பயிற்சிக் குழுப் பணியாளர்கள் மூலம் கிறிஸ்துவின் பிறப்பின் நாடகம் நடத்தப்பட்டது. மற்றும் ஒவ்வொரு சபைகளில் இருந்தும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது.

**13. கிறிஸ்துமஸ் ஆராதனை மற்றும் கொண்டாட்டம்** (Christmas Services)

2013 டிசம்பர் கிறிஸ்துமஸ் தினமான 25 ஆம் தேதியன்று ஷாலோம் திருமண்டலத்தின் 600 சபைகளிலும் விசேஷ ஆராதனை மற்றும் கொண்டாட்டம் நடைபெற்றது. அந்தந்தக் கிராம சபை மக்கள் தங்கள் கிராமத்திலுள்ள இயேசுவை அறியாதவர்களையும் அழைத்து, கிறிஸ்துமஸ் ஆராதனையில் பங்கெடுக்க வைத்தார்கள். எல்லா சபைகளும் நிறைந்து வழிந்தது. ஆலயத்திற்குள்ளே எத்தனைபேர் இருந்தார்களோ அதே அளவு மக்கள் ஆலயத்திற்கு வெளியேயும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கே நகர்புறங்களில் கூலி வேலைக்குச் சென்றிருந்தவர்கள் யாவரும் கிறிஸ்துமஸ் அன்று தங்கள் சபைகளுக்கு வந்து கொண்டாடினார்கள். அநேக இடங்களில் ஆலயத்தில் சாப்பாடு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை கொண்டாடினார்கள். கிறிஸ்துமஸ் அன்று மத்தியப்பிரதேசத்தில் உள்ள காகுடா என்ற கிராம ஆலயம் **பிஷப். தேவதாஸ்** அவர்களின் தலைமையில் **சகோ. டக்லஸ்** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குஜராத்தில் வரம்கேடா கிராமத்திலுள்ள 2 ஆலயங்களிலும், பாட்டன்பூரா கிராம ஆலயத்திலும் பங்குப் பெற்று சிறப்புச் செய்தியளித்து ஆசீர்வதித்து ஜெபித்தார்கள்.

## VII. செயல்திட்டங்கள் (Projects)

**1. சபை ஒருங்கிணைப்பு** (Church Network)

வளர்ந்து வரும் ஷாலோம் ஊழியத்தில் சபைகள், விசுவாசிகள், ஊழியர்கள் பெருகி வரவே இதையெல்லாம் ஒழுங்கும் கிரமமாய் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும்படியாய் சபை ஒருங்கிணைப்புப் பணி 2011 இல் ஆரம்பிக்கப்பட்டு **சகோ. கார்த்திக்** மற்றும் 2 ஊழியர்கள் இணைந்து மிகவும் சிறப்பாக இந்தப் பணிகளை நிறைவேற்றினார்கள். தற்போது **சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோதரி. மெர்லின்** இருவரும் இந்த ஒருங்கிணைப்புக் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள். இதுவரை சுமார் 670 சபைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

**2. சபை கட்டுமானப் பணி** (Church Constructions)

கடந்த ஆண்டில் 3 மாநிலங்களிலும் மொத்தம் 24 ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளது. இதில் குஜராத்தில் **கரம்பா, தனசியா,** இராஜஸ்தானில் **டும்மட், மாஜியா, டிடியாதேவ், லாலாவாடா, பாட்லா கட்டாரா,** மத்தியப்பிரதேசத்தில் **தெமெரா, மான்ட்லி, ரூபாகேடா, மேந்திக்கேடா, பாண்டிசேரா, கேகுடா** ஆகிய கிராம ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை ஷாலோம் பணித்தளங்களில் 265 ஆலயங்களைக் கட்டும்படியாகத் தேவன் கிருபைச் செய்தார்.

**3. பீல் ஆதிவாசி மாணவர் கல்விப்பணித் திட்டம்** (Bhil Students Education Project)

குஜராத் மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் போன்ற மூன்று மாநிலங்களிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பல்வேறு விசுவாசக் குடும்பங்கள் குறிப்பாக நம் சுதேச ஊழியர்களின் குடும்பங்களில் கல்வி கற்று வரும் பிள்ளைகளுக்காக சிறப்புத்திட்டங்கள் Shalom Charity Mission மூலமாகச் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மூன்று மாநிலங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களின் பிள்ளைகள் 487 மாணவர்களும், மூன்று மாநிலங்களிலுள்ள மூப்பர்களின் பிள்ளைகள் 234 பேர்களும், 3 மாநிலங்களிலும் உள்ள பள்ளி மற்றும் விடுதியில் பயிலும் மாணவர்கள் 333 பேர்களும் கல்வி பயின்று வருகிறார்கள். ஆக மொத்தம் 1054 பீல் ஆதிவாசி மாணவர்கள் தாங்கப்பட்டு வருகிறார்கள்.

இவர்கள் அருகே மற்றும் தொலைதூரங்களிலுள்ள நல்ல தரம் வாய்ந்த பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டு, ஆவிக்குரிய ஆசீர்வாதத்துடன் தரமான கல்வியறிவும் பெற்று வருகிறார்கள். இந்த 1054 மாணவர்களில் 782 மாணவர்களை ஜெபித்து மாதந்தோறும் ரூ. 600 கொடுத்துத் தாங்கும் ஆதரவாளர்கள் உள்ளனர். ஆனால், மீதமுள்ள 272 ஆதிவாசிப் பீல் மாணவர்களுக்காக ஜெபித்து மாதம் ரூ. 600 கொடுத்துத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் தேவை. இதுமட்டுமல்ல, குறிப்பாக சுமார் 150 மாணவர்கள் 10,11,12 மற்றும் கல்லூரிகளில் (TTC, Diploma, Nursing) படித்து வருவது குறிப்பிடத்தக்கது. மேற்படிப்பு படித்து வரும் சுமார் 150 மாணவர்களுக்கு சராசரி ரூ. 25,000 வீதம் வருடத்திற்கு உதவப்பட்டு வருகிறது. எனவே, இந்தப் பீல் ஆதிவாசி ஏழை மாணவர்களும் நம்மைப்போன்று படித்து சமுதாயத்தில் முன்னேற நாம் ஜெபிப்பதுடன் பரந்த மனதுடன் அவர்களைத் தாங்குவோமாக.

**4. ஷாலோம் மிஷன் நடுநிலைப் பள்ளி** (Shalom Mission Middle School, Bijalpur, Raj)

கடந்த 12 வருடங்களாக பிஜல்பூரில் (இராஜஸ்தான்) நமது பள்ளிப் பணியை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். 8 ஆம் வகுப்பு வரை அரசு அங்கீகாரம் பெற்ற நமது பள்ளியில் சுமார் 325 பிள்ளைகள் கல்விப் படித்து வருகிறார்கள். படிப்பு, விளையாட்டு, ஒழுக்கம் மற்றும் வேத அறிவில் முன்னேறி வருகிறார்கள். ஆசிரியர்களும் நன்கு அர்ப்பணிப்போடு தங்களின் பணியைச் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு ஞாயிறுப்பள்ளி ஒழுங்காக நடத்தப்பட்டு வருவதோடு தினமும் காலையில் வேதபாட தியானமும் நடைபெற்று வருகிறது. வருடத்திற்கு ஒரு முறை இந்தப் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய முகாம் நடத்தப்படுகிறது.

**5. சிறுவர் முன்னேற்றப் பணி** (Child Development Centre (CDC))

Compassion India மூலமாக நாம் நடத்தி வரும் CDC திட்டத்தில் குஜராத் ஹிரோலா கிராமத்தில் 241 பிள்ளைகளும், குஜராத் ஜெரி கிராமத்தில் 192 பிள்ளைகளும், மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் 278 பிள்ளைகளும் சேர்த்து மொத்தம் 711 பிள்ளைகள் கல்விப் பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை டியூசன் மற்றும் எல்லா உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த வருடத்தில் இந்தப் பிள்ளைகள் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு குஜராத்தில் காந்தி நகருக்குச் சென்று குஜராத் சட்டசபையைப் பார்த்தார்கள். அகமதாபாத்தில் Science City, 3D திரையரங்கம், Musical Water fountain போன்ற இடங்களையெல்லாம் பிள்ளைகள் கண்டு களித்தார்கள். இவர்களுக்குப் பேருந்து மற்றும் உணவு வசதி செய்யப்பட்டு, ஆசிரியர்களும், சபையின் மூப்பர்களும் இந்த சுற்றுலாவைப் பொறுப்பேற்றார்கள்.

**6. Children Survival Programme** (CSP)

Compassion India மூலமாக நாம் நடத்தி வரும் CSP திட்டத்தின் மூலம் குஜராத்தில் ஹிரோலா கிராமத்தில் 48 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும் மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியா கிராமத்தில் 58 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும் உடல் ஆரோக்கிய நலச்சேவை கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது கருவிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கவும் பராமரிக்கவும் நல்ல ஆரோக்கியத்துடன் வளர்க்கப்படவும் தடுப்பூசி மற்றும் சத்து மாத்திரைகளும் சத்துணவுகளும் இந்தச் சேவை மூலமாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் முழு கிராமத்தில் உள்ள விசுவாசி மற்றும் விசுவாசியல்லாத கர்ப்பிணிப் பெண்களும் பயன் பெற்று வருகின்றனர். இதன் மூலம் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சிப் பெற்று அநேகப் பெண்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

**7. சமுதாய மறுருபமாக்கல் பயிற்சி** (Institute of Community Transformation (ICT))

சேவோ பாரத் ஸ்தாபனத்தின் மூலமாக கடந்த வருடம் குஜராதில் ஒரு திட்டமும், மத்தியப்பிரதேசத்தில் ஒரு திட்டமும், இராஜஸ்தானில் இரண்டு திட்டங்களும், மொத்தம் நான்கு ICT திட்டங்கள் கிடைக்கப் பெற்று 40 இளம் ஊழியர்கள் நல்ல பயிற்சியைப் பெற்றார்கள். இந்த நான்கு பயிற்சிகளையும் B.Th படித்த நம் ஷாலோம் போதகர்கள் இயக்குநர்களாகவும் மற்றும் ஆசிரியர்களாகவும் இருந்து மிகவும் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். இதற்கு முன்பு பயிற்சிப் பெற்ற இராஜஸ்தான் மற்றும் குஜராத் ICT மாணவர்களுக்கு அஜ்மீரில் நவம்பர் 4 ஆம் தேதியும், மத்தியப்பிரதேசம் ICT மாணவர்கள் 20 பேருக்கு மார்ச் 12 ஆம் தேதி போபாலிலும் பட்டமளிப்பு விழா நடைபெற்றுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**8. குடி நீர் வசதித் திட்டம்** (Hand Pump)

CBN ஸ்தாபனத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும், பீல் மக்கள் வசிக்கும் கிராமங்களில் குடிநீர் மிகவும் தட்டுப்பாடுள்ள கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு மற்றும் Hand Pumps போடப்பட்டு குடி நீர் வசதி செய்து தரப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் குஜராத்தில் 25 Hand Pumps மிகவும் உள்ளடங்கிய, வண்டிகள் கூட போக முடியாத பகுதிகளிலும் மிகுந்த சிரமத்தோடு, சிறந்த முறையில் வசதிகள் செய்துதர கர்த்தர் ஒத்தாசை அருளினார். எல்லா இடங்களிலும் நன்றாக தண்ணீர் கிடைக்கப் பெற்று, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இது வரை 200 க்கும் அதிகமான கிராமங்களில் குடி நீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**9. 10 இலட்ச ஆத்தும அறுவடைத் திட்டம்** (One Million Soul Winning Project)

ஜனவரி 15.1.13 அன்று தெரிந்தெடுக்கப்பட்ட 48 பேர்களுக்கு விசேஷக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் புதிய அபிஷேகத்தையும் ஆத்துமபாரத்தையும் பெற்றார்கள். 48 ஊழியர்கள் குடும்பமாக ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சுகமளிக்கும் கூட்டம் நடத்துகிறார்கள். இதில் 48 ஊழியர்கள் இரண்டிரண்டு குடும்பமாகப் பிரிக்கப்பட்டு 24 குழுவாக ஊழியம் செய்கிறார்கள். ஒவ்வொரு வெள்ளிகிழமையும் 16 இடங்கள் வீதம் ஒவ்வொரு மாதமும் 48 இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகிறது. தேவன் இந்த ஊழியர்களை வல்லமையாய் அற்புத அடையாளங்களுடன் பயன்படுத்தி வருகிறார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் புதிய ஆத்துமாக்கள் வருகிறார்கள். கடந்த 2013 ஆம் ஆண்டில் 501 கிராமங்களில் சுகமளிக்கும்

கூட்டங்கள் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில் பங்குப் பெற்றவர்கள், மொத்தம் 49312 பேர். இதன் விளைவாக 1943 புதிய ஆத்துமாக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 4979 பேர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுள்ளார்கள். 4484 அற்புத சாட்சிகளைத் தேவன் நடத்தியுள்ளார். நிச்சயம் 2015 க்குள் இக் கூட்டங்கள் மூலமாய் 10 இலட்சம் ஆத்துமாக்கள் தேவனண்டை வந்து விடுவார்கள் என்று முழு நிச்சயமாய் விசுவாசிக்கிறோம். 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாத்தில் **சகோ. மோகன். சி. லாசரஸ்** அவர்கள் பணித்தளத்திற்கு வந்திருந்தபோது இந்தத் திட்டங்களுக்கென்று ரூ. 22 இலட்சம் மதிப்பில் 4 TATA மேஜிக் வாகனங்களும், 4 Amplifier, 8 Speakers, 12 Mikes, 4 Still Cameras, 4 Generators **இயேசு விடுவிக்கிறார் ஸ்தாபனத்தின்** மூலமாக ஜெபித்து வழங்கப்பட்டது. இதைக் கொண்டு கடந்த ஆண்டு ஊழியம் நிறைவேற்றப்பட்டது. அற்புதங்கள் ஏராளமாய் நடந்தன. குறிப்பாக மரித்தவர்களைத் தேவன் உயிரோடே எழுப்பினார். **இன்றும் இயேசு ஜீவிக்கிறார். அல்லேலூயா !**

**10. ஒலி நாடாக்கள் & பாடல் புத்தகங்கள் வெளியீடு** (Publication of CD & Song Books)

கடந்த 2013 ஆம் ஆண்டில் பாடல்கள் அடங்கிய 2 ஆடியோ C.D. க்கள் வெளியிடும்படியாய் ஆண்டவர் கிருபைக் கொடுத்தார். சிறுவர்களுக்கென்று C.B.C. பாடல்கள் **"என் நண்பர் இயேசு"** என்ற தலைப்பிலும் மற்றும் வாலிபர்களுக்கென்று சிறப்பு C.D. **"இயேசுவைப் போல்"** (தேரே ஜைசா) வெளியிடப்பட்டது.

**11. விசுவாசக் குடும்பங்களுக்கு வேதாகமம் வழங்குதல்** (Bible Project)

ஒவ்வொரு வருடமும் குஜராத் வேதாகமச் சங்கத்திலிருந்து வேதாகமம் அதிகமாய் விநியோகித்த ஸ்தாபனத்திற்கு விருது கொடுக்கப்படும். ஷாலோம் ஊழியத்திற்கு அந்த விருது தொடர்ந்து கிடைப்பது மிக சந்தோஷமான காரியம். 2013 இல் சுமார் 4000 வேதாகமங்களுக்கு மேலாக வாங்கி விநியோகிக்கப்பட்டது. ஆகையால் கடந்த வருடமும் வேதாகமச் சங்கத்திலிருந்து இந்த விருது நமக்கு கிடைக்கப்பெற்றது.

**12. இலக்கியம்** (Literature Project)

கடந்த ஆண்டு 670 சபைகளுக்கும் சபை விசுவாசிகளுக்கும் வேதாகமங்கள், ஆவிக்குரியப் புத்தகங்கள், ஆடியோ வீடியோ சிடி மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் கிறிஸ்துமஸ் அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.

**13. ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை** (Sharon Memorial Mission Hospital)

1991 ஆம் ஆண்டு ஊழியப்பாதையின் ஆரம்ப நாட்களில், **பிஷப். தேவதாஸ்** அவர்களின் குடும்பத்திற்கு தேவன் தந்த மூன்றாவது குழந்தை **"ஷாரோன்"**, சரியான மருத்துவ வசதியில்லாமல், பணித்தளத்திலே பிள்ளை பிறந்து 4 நாட்களில் இறந்து விட்டது. C.N.I. கல்லறைத் தோட்டத்தில், ஆதிக் காலத்தில் இந்தப் பகுதியில் ஊழியம் செய்து மரித்த மிஷனெரிகளின் கல்லறை வரிசையில் இந்த குழந்தையும் அடக்கம் செய்யப்பட்டது. அன்று அவர்கள் உள்ளத்தில் எழுந்த ஒரு சிறு வித்துதான் **ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை.** தேவ கிருபையால் வருடத்திற்கு இரண்டு முறை இலவச மருத்துவமுகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் பல்லாயிரக்கணக்கான ஆதிவாசி ஜனங்கள் பயன் பெற்று வருகின்றனர். இந்த முகாம்களில் **Medi Vision, CBN, Dr. பிரேமா கிறிஸ்டோபர், Dr. ஏபல்,**

**Dr. இன்பக் குமார்** மற்றும் பல மருத்துவர்கள் குழுவாக வந்து நடத்திக் கொடுத்து வருகின்றனர். **Dr. ஷிஜு** அவர்கள் ஒரு வருடம் பணித்தளத்திலிருந்து மருத்துவப் பணிகளை சிறப்பாக கவனித்து வந்தார்கள். தேவனுடைய கிருபையினால் ஷாலோம் ஊழியத்தின் சொந்த கட்டிடத்தில் **15.07.2013** அன்று **ஷாரோன் நினைவு மருத்துவமனை** தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதில் **Dr. இன்பக் குமார்** அவர்கள் தலைமை மருத்துவராக இருந்து செயல்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் பல நூறு ஆதிவாசி மக்கள் வந்து சிகிட்சை பெற்றுச் செல்கின்றனர்.

## VIII. சிறப்பு விருதுகள் (Special Awards)

### 1. இயேசு விடுவிக்கிறார் - சிறந்த பங்காளர் விருது

**26.10.2013** அன்று இயேசு விடுவிக்கிறார் (நாலுமாவடி) ஊழியத்தின் **35** வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் (திறப்பின் வாசல் ஜெபம்) ஊழியப்பாதையில் சிறந்த பங்காளராக இணைந்து ஷாலோம் ஊழியங்கள் செயல்படுவதைக் கனப்படுத்தி **சகோ. மோகன். சி. லாசரஸ்** அவர்கள் மூலம் **பிஷப். தேவதாஸ்** அவர்களுக்குச் சிறப்பு விருது வழங்கப்பட்டது. தேவனுக்கு நன்றி கூறுகிறோம்.

### 2. சேவா பாரத் ஸ்தாபனம் - சிறப்பு விருது

சேவா பாரத் ஸ்தாபனத்தினர் திருச்சபைகளை ஸ்தாபிக்கும் ஸ்தாபனங்களுக்கு I.C.T. என்ற திட்டத்தினைக் கொடுத்து, ஊழியங்களை முன்னேற்றப் பாதைகளில் நடத்தி வருகின்றனர். நமது ஷாலோம் ஊழியங்களுக்கும் கடந்த 12 வருடங்களாக I.C.T. திட்டங்களைக் கொடுத்து வருகிறார்கள். இதன் விளைவாக அநேக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதை பாராட்டியும், I.C.T. நிகழ்ச்சிகளைச் சிறப்பாய் நடத்தினதற்காகவும், ஷாலோம் ஊழியத்திற்கு சேவா பாரத் ஸ்தாபனத்தின் மூலம் சிறப்பு விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை **Dr. சிரஞ்சீவி** அவர்கள் நமது ஷாலோம் **பிஷப். தேவதாஸ்** அவர்களுக்கு வழங்கினார்கள்.

### 3. இந்திய வேதாகமச் சங்கம் - வேதாகம விநியோகஸ்தர் விருது

(BSI - Special Bible Distribution Award)

கடந்த **2013** ஆம் ஆண்டில் அதிகமான வேதப்புத்தகங்களை வாங்கி விநியோகம் செய்த நம் ஷாலோம் ஊழியங்களைப் பாராட்டி இந்திய வேதாகமச் சங்கத்தின் (B.S.I.) குஜராத் கிளை மூலமாக **14.11.2013** அன்று நடைபெற்ற வருடாந்திரக் கூடுகையில் சிறப்பு விருதினை (Special Distribution Award) **Rev. நிக்கோலஸ் பர்மார்** (Ex. General Secretary of BSI) அவர்கள் வழங்க **பிஷப். தேவதாஸ்** அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் குஜராத் திருமண்டல CNI பேராயர் **சில்வான்ஸ் கிறிஸ்டியன்** மற்றும் **Rev. டேவிட் H. தேசாய்** (BSI General Secretary) அவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

## IX. இதர ஊழியங்கள் (Other Ministries)

### 1. வேத பாடப் பரீட்சை (Bible Test)

**2013** இல் ஊழியர்களுக்கும், ஊழியக்காரிகளுக்கும் வேத பாடப் பரீட்சை நடத்தப்பட்டது. வேதாகமத்தில் **"பரிசுத்த ஆவியானவர்"** பற்றிய சுமார் **167** வேத வசனங்களைத் தெரிந்தெடுத்து ஒரு புத்தகமாக அச்சடித்து அவர்கள் கரங்களில் கொடுக்கப்பட்டது. இந்த வசனங்களை மனப்பாடமாகப் படித்து, ஊழியக்காரர்களுக்கு எழுத்துப் பரீட்சையாகவும், ஊழியக்காரிகள்

மனப்பாடமாக ஒப்பித்தும் இந்தப் பரீட்சையில் பங்குப் பெற்றார்கள். படிப்பறிவில்லாத பெண்களும் மனப்பாடமாகப் படித்து ஒப்பித்தார்கள். 167 வசனங்களையும் மனப்பாடமாக ஒப்பித்தவர்கள் பரிசுகளைப் பெற்றார்கள். குறிப்பாக 100 பேருக்கு மேலாக முதல் பரிசுகளைப் பெற்றார்கள்.

**2.** B.Th., Exam

கடந்த ஆண்டில் Allahabad Bible Seminary மூலம் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் 13 பேர்கள் B.Th., தேர்வு எழுதினார்கள்.

**3. மிஷனெரி பிரதிஷ்டை** (Missionary Dedication)

கடந்த வருடத்தில் நமது பீல் சுதேச ஊழியர்கள் 34 பேர் தென்னிந்தியாவில் ஒரு சில பகுதிகளிலுள்ள சபை ஆராதனைகளிலும் சிறப்பு கூடுகைகளிலும் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். சுதேச ஊழியர்களைக் குடும்பமாகத் தாங்கி வரும் அனைத்து ஆதரவாளர்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

**4. பணித்தளத்தைப் பார்வையிட்ட தேவ ஜனங்கள்** (Field Visitors)

கடந்த ஆண்டில் நமது பணித்தளத்தைப் பார்வையிடும்படியாக தென்னகத்திலிருந்து அநேகப் போதகர்கள், ஆதரவாளர்கள் மற்றும் தேவப் பிள்ளைகள் வரவும் ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபைச் செய்தார்.

**5. இயேசு விடுவிக்கிறார் ஊழியர்களின் பணித்தள வருகை**

2013 நவம்பர் 22,23,24 ஆகிய தினங்களில் இயேசு விடுவிக்கிறார் (நாலுமாவடி) ஊழியர்கள் **சகோ. ஜெபசிங், சகோ. ஜான் வெஸ்லி, சகோ.ஜோசுவா** ஆகியோர் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட்டு ஊழியம் செய்தார்கள். விசேஷமாய் 22.11.2013 வெள்ளிக் கிழமையன்று நகரேலா (குஜராத்) கிராமத்தில் 10 இலட்ச ஆத்துமாக்கள் அறுவடைத் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற சுகமளிக்கும் கூட்டத்தில் குழுவாகப் பங்கு பெற்றார்கள். அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தில் சுமார் 800 பேர்கள் கூடியிருந்தார்கள். அந்தப் பகுதி ஊழியர்கள் இணைந்து ஆராதனை நடத்தினார்கள். ஆராதனை முடிந்ததும் **பாஸ்டர். பால் முனியா** (ம.பி) அவர்கள் வல்லமையாய் செய்தியளித்தார்கள். ஜெபவேளையில் வந்திருந்த அனைத்து ஊழியர்களும், ஊழியக்காரிகளும், வியாதியுள்ளவர்கள் மேல் தங்கள் கைகளை வைத்து ஜெபித்தார்கள். தங்கள் கண்கள் காணத்தக்கதாக தேவன் அற்புதங்களை பீல் சுதேச ஊழியர்கள் மூலம் நடத்தினார். கூட்டத்தின் முடிவில் 20 பேருக்கு மேலாக சாட்சிகளைப் பகிர்ந்தார்கள்.

சுமார் 25 குடும்பங்கள் புதிதாக அன்றைய தினம் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். இதைக் கண்ட இயேசு விடுவிக்கிறார் குழுவினர் இவ்வாறு கூறினார், "வருங்காலத்தில் **சகோ. மோகன். சி. லாசரஸ்** அவர்களைப் போல பீல் சுதேச ஊழியர்களை தேவன் பல இலட்ச ஜனங்களுக்கு ஆசீர்வாதமாய் பயன்படுத்துவார்" என்றும் "இவர்களைக் கொண்டு நிச்சயமாய் பீல் மக்கள் தேவனை அறிந்து கொள்வார்கள்" என்றும் கூறினார்கள்.

**6. இயேசு அழைக்கிறார் - எருசலேம் ஜெபக் கோபுரம்**

2013 ஆம் வருடம் நவம்பர் 4 ஆம் தேதி எருசலேமில் இயேசு அழைக்கிறார் மூலமாக ஜெபக் கோபுரம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2000 வருடங்களுக்கு முன்பாக, இந்தியா மீது பாரம் கொண்டவராய் இயேசு தமது சீஷரில் தோமாவையே நம் நாட்டிற்கு (சென்னைக்கு) அனுப்பித் தந்தார். இன்று அதே சென்னையிலிருந்து தேவன் **Dr. பால் தினகரன்** அவர்களை

எழுப்பி எருசலேமிற்குக் கொண்டு போய் ஜெபிக்கும்படியாய் ஜெப கோபுரத்தை உருவாக்க தேவன் சித்தம் கொண்டது உண்மையிலேயே மறக்க முடியாத நாள். இந்த ஜெப கோபுர பிரதிஷ்டைக்கு நமது **பிஷப். தேவதாஸ்** அவர்களும் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

**பிஷப். தேவதாஸ்** அவர்கள் யோர்தான் நதியில் 16 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், இயேசுவின் உயிர்தெழுந்த கல்லறை வளாகத்தில் திருவிருந்து ஆராதனை நடத்தவும் தேவன் கிருபைச் செய்தார். மட்டுமல்லாமல் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் குடும்பமாகச் சென்று எருசலேமிற்காக ஜெபிக்கவும், பரிசுத்த பூமியைச் சுற்றிப் பார்க்கவும் தேவன் அநுக்கிரகம் பண்ணினார். எருசலேமே உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக! தேவனுக்கே மகிமை!

**7. வட இந்தியாவிலுள்ள இதர சபைகளுக்கு ஆசீர்வாதம்** (Blessing for Other Ministries)

1. 2013 ஜனவரி 26,27 தேதிகளில் மகாராஷ்ராவில் நாக்பூரில் **பாஸ்டர். விஜய்** அவர்கள் சீஷத்துவ முகாம் ஒழுங்கு செய்திருந்தார்கள். B.S.S. என்ற ஸ்தாபனத்தின் அனைத்துச் சபை வாலிபர்கள் இம்முகாமில் பங்குப் பெற்றார்கள். அதில் விசேஷ செய்தியாளராக **பிஷப். தேவதாஸ்** அவர்கள் அழைக்கப்படிருந்தார்கள். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாவரும் விடுதலை மற்றும் ஆவியின் அபிஷேகம் பெற்றார்கள். நமது **பிஷப். தேவதாஸ்** அவர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்தினார்.

2. குஜராத் காந்திநகரில் அமைந்துள்ள Green City ஆலயத்தில் 7 வது ஆண்டு நிறைவு விழாவிற்கு **பிஷப். தேவதாஸ்** அவர்களை சிறப்புச் செய்தியாளராக **பாஸ்டர். சாம் ஜோஸ்வா** அவர்கள் அழைத்திருந்தார்கள். அந்தச் சபையில் குஜராத்தில் உள்ள IAS Officers, **Bro. D.K. Rao** அவர்களும், **Bro. Jagadish Pandian** அவர்களும் உறுப்பினர்களாய் இருக்கிறார்கள். அவர்கள். **பிஷப். தேவதாஸ்** அவர்களை மிகுந்த அன்புடன் வரவேற்றார்கள். அந்த ஆராதனை மற்றும் செய்தி மக்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது.

3. குஜராத் அகமதாபாத்தில் அக்டோபர். 10,11,12 தேதிகளில் இயேசு அழைக்கிறார் மூலம் தீர்க்கதரிசன மாநாடு நடத்தப்பட்டது. இதில் **Dr. பால் தினகரன்** அவர்களும் மற்றும் **சகோதரி. இவாஞ்சலின் பால்** அவர்களும் விசேஷ செய்தியளித்தார்கள். இதில் அபிஷேகப் பகுதியை நடத்தும்படியாக, **பிஷப். தேவதாஸ்** அவர்கள் அழைக்கபட்டிருந்தார்கள். ஜெப வேளையில் தேவன் அபரிவிதமாய் இறங்கியதால் மக்கள் அபிஷேகத்தில் நிரம்பினார்கள். இந்த தீர்க்கதரிசன மாநாட்டிற்கு ஷாலோம் சபைகளிலிருந்து சுமார் 400 பேர் பங்குப் பெற்றார்கள். **பிஷப். தேவதாஸ்** அவர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். மொத்தம் குஜராத்தின் பல பாகங்களிலிருந்து சுமார் 2000 பேர் பங்குப் பெற்று தேவ வல்லமையுடன் திரும்பினார்கள்.

**8. மத்தியப்பிரதேச முதலமைச்சருடன் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்** (Christmas Programme with C.M. of M.P.)

டிசம்பர் 26 அன்று மத்தியப்பிரதேச முதலமைச்சர் அவர்களின் வீட்டு வளாகத்தில் கிறிஸ்துமஸ் விழா நடத்தப்பட்டது. இதில் முக்கியமான சபைப் போதகர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என சுமார் 4000 பேர் பங்குப் பெற்றார்கள். ஷாலோம் ஊழியத்தில் இருந்தும் **பேராயர். தேவதாஸ்** அவர்களும் மற்றும் முக்கியமான ஷாலோம் மத்தியப்பிரதேச போதகர்களும் பங்குப் பெற்றார்கள். வெகு நேர்த்தியாய் இந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முதலமைச்சர் அவர்கள் அனைத்துப் **பேராயர்கள்** மற்றும் கிறிஸ்தவத் தலைவர்களை கவுரவப்படுத்தி வரவேற்றது குறிப்பிடத்தக்கது. ஷாலோம் சபைகளின் சார்பில் **முதலமைச்சர்** அவர்களுக்கு நினைவுப் பரிசு ஒன்று வழங்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## 10லட்ச ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடைபெறும் சுகமளிக்கும் கூட்டத்தில் மரித்த ஒரு சகோதரியை தேவன் உயிரோடே எழுப்பிய ஒரு அற்புத சாட்சி. தேவனுக்கே மகிமை!


மரித்தப் பெண்ணை துணிகளால் மூடி ஜெபிக்கக் காத்திருக்கும் உறவினர்கள்

தேவனுக்கே மகிமை! எனது மனைவி சுர்பாய், சுமார் 1 ½ வருடமாக வயிறு வலியால் பாதிக்கப்பட்டு எது சாப்பிட்டாலும் செரிக்காமல் வயிறு, கல் மாதிரி இருக்கும். எப்பொழுதும் அழுதுக் கொண்டே இருப்பாள். இதற்காக அதிக மருத்துவம் மற்றும் மந்திரவாதம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. 24–10–2013 அன்று மாலை 6 மணியளவில் திடீரென்று அதிகமான வலியினால் வயிற்றைப் பிடித்துக் கொண்டு, அப்படியே கீழே விழுந்து மரித்து விட்டாள். எல்லா இடமும் செய்தி பரவியது. எங்கள் வழக்கத்தின்படி உறவினர்கள் ஒவ்வொரு குடும்பமாக வந்து புதுத் துணிகள் 20 க்கும் மேல் சடலத்தின் மீது போட்டார்கள். மறுநாள் காலை 9 மணியளவில் ஜாம்புகேடா கிராம ஷாலோம் சபை விசுவாசியான எனது மனைவியின் அக்காவின் கணவர் பக்கத்து கிராமத்திலிருந்து வந்து இன்று வெள்ளிக்கிழமை கிராமத்தில் சுகமளிக்கும் கூட்டம் இருக்கிறது. முதலாவது இந்தச் சடலத்தை அங்கு எடுத்துச் செல்வோம் என்று விசுவாசமாய் கூறினார். ஆனால் யாருமே ஒத்து வரவில்லை. நாங்களும் இயேசுவை அறியாதபடியால் நம்பிக்கை இல்லாமல் சடலத்தை எரிப்பதற்குத் தேவையான கட்டைகள், துணிகள் போன்ற ஆயத்தங்களைச் செய்து விட்டோம்.

ஆனாலும் எனது அத்தானின் பிடிவாதத்தினால், ஜீப் ஒன்றை வரவழைத்து, அதில் சடலத்தை ஏற்றி, சுமார் 15 பேருடன் சென்றோம். அதன் பின் ஒரு டிராக்டரில் 35 பேர் ஆண்களும் பெண்களும் சொந்தக்காரர்களாக வந்தார்கள். சுமார் 2 மணியளவில் ஜாம்புகேடா ஆலயம் வந்து சேர்ந்தோம். மரித்த சடலத்தை அப்படியே தூக்கி ஆலயத்தில் கடைசி வரிசையில் கொண்டு வைத்து விட்டோம். கூட்டம் நடந்து கொண்டிருந்தது. சபைப் போதகர். திலீப்சிங்பாய் மற்றும் அன்றைய தினம் விசேஷ செய்தியளிக்கும்படியாய் வந்திருந்த போதகர். காளியா பாபோர் என்பவரும் மற்றும் சபை விசுவாசிகளும் சேர்ந்து ஒரு ஜெபம் செய்தார்கள். பின்பு கூட்டம் 4 மணியளவில் முடிவடைந்தது. 2 போதகர்களும் சேர்ந்து மறுபடியும் ஜெபித்தார்கள். எங்களோடு வந்திருந்தவர்கள் சாராயம் குடித்துக் கொண்டு, இனி ஒன்றும் நடக்காது, போய் சடலத்தை எரித்து விடுவோம் என்று சொன்னார்கள். ஆனாலும் போதகர்களும், மூப்பர்களும், விசுவாசிகளும் சேர்ந்து இன்னும் விசுவாசமாய் ஜெபித்தார்கள்.

திடீரென்று மரித்த சடலம் அசைய ஆரம்பித்தது. மேலே மூடியிருந்த சுமார் 20 துணிகளை கழற்றினோம். பின்பு எனது மனைவி கண்களைத் திறந்து எழும்பி உட்கார்ந்தாள். என்ன அற்புதம்! மரித்த எனது மனைவி 24 மணி நேரம் (1 நாள்) கழித்து 25–10–2013 அன்று மாலை 6 மணிக்கு உயிரோடு எழுந்தாள். நிச்சயமாக இயேசு தான் ஜீவனுள்ள தேவன். நாங்கள் இனி இயேசுவுக்காக வாழ்வோம். எங்களோடு வந்திருந்தவர்களும் இயேசு தான் ஜீவனுள்ள தேவன் என்று கூறினார்கள். அல்லேலூயா! ஆதி அப்போஸ்தலர் காலம் நடந்த அற்புதங்கள் பீல் மக்கள் மத்தியிலும் திரும்ப வந்துள்ளது.




இந்த மரித்த சகோதரியை
உயிரோடு எழுப்பும்படி
தேவனிடம் மன்றாடிய
சுதேச ஊழியர்கள்
போதகர். திலீப்சிங் வாசுனியா &
போதகர். காளியாபாபோர்.


மரித்தப் பெண் 1 நாளுக்குப்பின் உயிரோடு எழுந்து அமர்ந்திருக்கும் காட்சி

# புது வருட ஊழியர் குடும்ப வாக்குத்தத்தக் கூடுகை



பிஷப். தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்கு வரவேற்பு



பாடல் மற்றும் ஆராதனை வேளை



வாக்குத்தத்த செய்தியளிக்கும் பிஷப். தேவதாஸ் அவர்கள்



வருடாந்திர ஊழிய அறிக்கையை சமர்ப்பிக்கும்
சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



சுதேச ஊழியர்களின் புது வருட சிறப்புக் காணிக்கைக்கான ஜெபம்



சகோ. டைட்டஸ் அவர்களின் பகிர்வு வேளை



தேவனை ஆராதிக்கும் பீல் சுதேச ஊழியர்கள்




கூடியிருந்த ஊழியர் குடும்பங்கள்

# பிஷப். தேவதாஸ் அவர்கள் தேவ செய்தியளித்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாக்குத்தத்த கூடுகைகள்



குஜராத் பாட்டன்புரா சபையில்



கிறிஸ்துமஸ் ஆராதனை வேளை





கிறிஸ்துமஸ் ஆரானையில் விசுவாசிகளின் கூட்டம் வரம்கேடா, குஜராத்,







புத்தாண்டு விழிப்பு ஆரானை – கும்புரா, இராஜஸ்தான்





குஜராத், கங்கேலா கிராமசபையில் புத்தாண்டு ஆராதனை

**சுதேச ஊழியரின் சாட்சி**



## போதகர். திலீப்சிங் வாசுனியா

**ஜாம்புகேடா, மத்தியப்பிரதேசம்**

இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் திலீப்சிங் வாசுன்யா. நான் மத்தியப்பிரதேசம் அலிராஜ்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஜாம்புகேடா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எனது மனைவி பாசுடிபேன், 9 வருடங்களாக 12 பிசாசுகள் பிடித்திருந்ததால் அவதிப்பட்டார்கள். நானும் மந்திரவாதிகளை நாடி பூஜைகளைச் செய்தும் என்னுடைய நிலம், பணம், நகைகள் போன்ற எல்லாச் சொத்துக்களை இழந்தும் நிம்மதி இல்லாமலிருந்தேன். இந்நிலையில் நான் B.A., முடித்து உதய்கட் என்ற ஊரில் வேலைப்பார்த்து வந்தேன்.

என்னுடைய சகோதரரின் மகன் இயேசு கிறிஸ்துவை அறிந்து, சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவன். நாங்கள் மிகவும் வேதனைக்குள்ளாக இருந்ததை அறிந்து எனக்கும் இயேசுவைப் பற்றிக் கூறினான். என்னுடைய குடும்பத்தார் தீவிர விக்கிரக ஆராதனை செய்பவர்கள். ஆகையால் நான் யாருக்கும் தெரியாமல் சபைக்குச் செல்ல ஆரம்பித்தேன். ஒரு நாள் எனது சகோதரனின் மகன், ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. நூர்ஜி பாய் அவர்களை எங்களது வீட்டிற்கு அழைத்து வந்தான். அவர் எங்களுக்காக தேவனிடம் பாரத்தோடு ஜெபித்த போது எனது மனைவியைப் பிடித்திருந்த 12 பிசாசுகளும் ஓடின. தேவன் ஒரு பெரிய விடுதலையைக் கட்டளையிட்டார். இந்த அற்புதத்தைக் கண்ட நாங்கள் இயேசு கிறிஸ்துவை குடும்பத்துடன் சொந்த இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொண்டோம். பின்பு "ஷாலோம் ஊழியத்தில் இணைந்து வேதாகமப் பயிற்சிப் பெற்று 1994 இல், ஊழியத்தை ஆரம்பித்தேன். தொடர்ந்து B.Th படித்து முடித்து, போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டு, ஜாம்புகேடா கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறேன். 90 குடும்பங்கள் சபையில் இருக்கிறார்கள். மேலும் 2 கிளை சபைகளை உருவாக்கவும் குன்டல்வாசாவில் 16 குடும்பங்களையும், அம்பாகேடியில் 12 குடும்பங்களையும் ஆதாயப்படுத்த தேவன் கிருபைச் செய்துள்ளார். தேவனுக்கே மகிமை!

**கடந்த 25.10.2013 அன்று இந்த சுதேச ஊழியரின் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் மரித்துப்போன ஒரு சகோதரியை தேவன் உயிரோடு எழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.**

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **All Saints Church, Madurai.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரை தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

# 2014 ×Õ YÚP B ºoYôRd áhPeLs

**"மகிழ்ந்து களிகூரு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்."** (யோவேல் 2:–21) என்ற வாக்குத்தத்தத்தை தேவன் 2014 இன் வாக்குத்தத்தமாக அருளியுள்ளார்.

ஷாலோம் ஊழிய பணித்தளத்தில் ஊழியக்காரர்கள் குடும்பத்திற்கென்று விசேஷ வாக்குத்தத்த கூட்டங்கள் ஜனவரி 6 ஆம் தேதி குஜராத் ஊழியர்கள் குடும்பத்திற்கும் 8 ஆம் தேதி மத்தியப்பிரதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், இராஜஸ்தான் ஊழியர்கள் குடும்பத்திற்கு 2 பகுதிகளாகப் பிரித்து 14 & 16 ஆம் தேதிகளில் நடைபெற்றது. இதில் அனைத்து ஷாலோம் ஊழியர்களும், குடும்பமாக மிகவும் உற்சாகமாய் பங்குப் பெற்றார்கள். பாடல் மற்றும் ஆராதனை வேளை மிகவும் தேவ பிரசன்னத்தினால் நிரம்பியிருந்தது. **சகோதரி.வஹிதா தேவதாஸ்** மற்றும் **சகோ. ஃப்ராங்க்ளின்** பாடல் ஆராதனையை நடத்தினார்கள். புதிய வாக்குத்தத்த பாடலைப் பாடிய போது அனைவரும் மகிழ்ந்து களிகூர்ந்தார்கள். பின்பு அனைத்து ஊழியர்களும் **பேராயர். தேவதாஸ்** குடும்பத்திற்கு புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறி ஜெபித்தார்கள்.

தொடர்ந்து **சகோதரி.வஹிதா தேவதாஸ்** அவர்கள் 2013 ஆம் ஆண்டில் தேவன் செய்த மகத்தான கிரியைகளை தேவ நாம மகிமைக்காக எடுத்துக் கூறினார்கள். பீல் மக்களின் இரட்சிப்பு மற்றும் சபை வளர்ச்சிக்காகவும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. **சகோ. டைட்டஸ்** அவர்களும் ஊழியர்களுக்கு வாழ்த்துக்கள் கூறினார்கள். பின்பு ஊழியர்கள் குடும்பமாகத் தங்கள் சபையில் கிடைத்த கிறிஸ்துமஸ் காணிக்கைகளில் ஒரு பங்கையும், புத்தாண்டு ஸ்தோத்திரக் காணிக்கைகளையும் செலுத்தினார்கள். பின்பு 2014 ஆம் வருட வாக்குத்தத்த வசனத்தை வைத்து செய்தியளித்தார்கள். ஜெப வேளையில் ஆவியானவர் பலமாய் இறங்கினார். யாவரும் புதிய அபிஷேகத்தைப் பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள். 2014 ஆம் ஆண்டில் ஆத்துமாக்களை இரட்டிப்பாக ஆதாயப்படுத்தவும், ஒவ்வொருவரும் கிளை சபைகளை உருவாக்கவும், புதிய ஊழியர்களை எழுப்பவும் தீர்மானம் எடுத்தார்கள். புத்தாண்டுக்கான ஐக்கிய விருந்து சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டது. **தேவனுக்கே மகிமை!**


**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

£\l×d áÓûLLs

Yôd Ï jRjR B ºoYôR ù_Td áÓûL

நாள் : **01.02.2014 (சனிக்கிழமை)** நேரம் : **காலை 9.30 - 1.00**

தேவச் செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

` ôúXôm ETYôNd áÓûL

நாள் : **08.02.2014 (சனிக்கிழமை)** நேரம் : **காலை 9.30 - 1.00**

தேவச் செய்தி : **Pr. D. பிரவின் குமார்,** (I.P.A. Church, திருநெல்வேலி)

ùT i LÞdLô ] "GvRo" ù_Td áÓûL

நாள் : **15.02.2014 (சனிக்கிழமை)** நேரம் : **காலை 9.30 - 1.00**

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**“அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போல என்றென்றைக்குமுள்ள சதாக்காலங்களிலும் பிரகாசிப்பார்கள்”.** (தானியேல் 12 : 3)



# எமில் அண்ணன்

## (10.01.1941 – 19.12.2013)

**அருள்திரு. Y.C. நவமணி, திருமதி. கிரேஸ் நவமணி** தம்பதியர்களுக்கு **10.01.1941** அன்று மகனாகப் பிறந்து, தனது பதினேழாவது வயதில், **திரு. P. சாமுவேல், Rev. N. ஜீவானந்தம்** ஆகியோர் மூலம் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்பட்டு, கடந்த **45** வருடங்களாக இந்திய தேசத்தின் மிஷனெரிப் பணிகளிலும், உலகளாவிய ஊழியங்களிலும் கர்த்தரால் வல்லமையாக உபயோகிக்கப்பட்டவர் அன்பு சகோதரர் **N. எமில் ஜெபசிங்** அவர்கள். **“அண்ணன்”** என்றே அனைவராலும் அழைக்கப்பட்ட அவர்களின் ஊழியக் காலங்கள் சுவிசேஷப் பிரபல்ய வரலாற்றின் பொற்காலங்கள் ஆகும்.

இரட்சிக்கப்பட்ட நாள் துவக்கம், இயேசு கிறிஸ்துவின் இறுதிக்கட்டளைக்குச் இணங்கி, போப் கல்லூரியில் செய்த வேலையைத் துறந்து, இராஜாவின் வேலைக்காய் பெரும்பிரயாசமெடுக்கத் துவங்கினார்கள். VBS என்ற ஊழிய அமைப்புக்கு அந்நாட்களில் அவர்கள் தந்த வேகம், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவுக்கு அவர்களிட்ட அஸ்திபாரம், TWR (Trans World Radio) என்ற சர்வதேச வானொலி ஸ்தாபனத்தின் தெற்காசிய நாடுகளுக்கு அவர்கள் கொடுத்த தலைமைத்துவம் என்று கர்த்தர் தந்த பொறுப்புகள் அனைத்தின் மூலமாகவும் இயேசுவின் நாமத்தை இயன்றமட்டும் தேவையுள்ள இடங்களுக்குக் கொடுத்தார்கள். வானொலியை வசனம் அனுப்பும் வல்ல கருவியாகப் பயன்படுத்தி, இந்திய துணைக்கண்டத்தின் குக்கிராமங்கள் கிறிஸ்துவை கண்டுகொள்ளும் சிலாக்கியத்தை ஏற்படுத்தித் தந்தார்கள்.

ரோமர் **15:21** ஆம் வசனத்தை ஆதாரப்படுத்தி, சொல்லப்பட்டிராத இடங்களைத் தன் வாழ்வின் முழு, முதற் பணியாக்கி, **01.05.1980** அன்று, தூத்துக்குடி முயல் தீவில் கூடி ஜெபித்து, **“விஷ்வவாணி”** நற்செய்திப்பணி இயக்கத்தைத் துவக்கினார்கள். தளங்களை மென்மேலும் திறக்க தொடர்ந்து எழும்பிய தளச் சபைகளை ஸ்திரப்படுத்த, **“இந்திய விசுவாசிகளின் ஐக்கியம்”** என்ற கிளை ஊழியத்தை உண்டாக்கி, அறியப்படாத இடங்களில் ஆலயமணிகள் பெருகச் செய்தார்கள். சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை முறைப்படி நிறைவேற்ற நல்ல சமாரியன், விஷ்வாசி சங்கதி போன்ற ஊழியங்களையும் உருவாக்கி, எளிய குடும்பங்களை வாழ்வித்தார்கள். BLESS INDIA, VISION **2020** எனும் தனிப்பெரும் அமைப்பை ஏற்படுத்தி, தேசிய அளவிலான ஊழிய ஸ்தாபனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வகைசெய்தார்கள்.

**135** பாடல்களை இயற்றி, சிலுவை வீரர் கீதங்களாக வெளியிட்டு, கிறிஸ்தவப் பாடல்களுக்கு புத்துணர்ச்சிக் கொடுத்தார்கள். கனல் சிந்தும் எழுத்துக்களாலும், அனல் பறக்கும் தேவச் செய்தியினாலும் விசுவாச நெஞ்சங்களைத் தொட்டார்கள். ஆத்தும ஆதாயப்பணிக்கு ஆயிரமாயிரமான உள்ளங்களையும் ஊழியர்களையும் ஆயத்தம் செய்தார்கள்.

செய்யும் அனைத்தையும் வசனத்தின் மையத்தில் சீர்தூக்கிப் பார்த்து செய்து நிறைவேற்றும் கிருபை கர்த்தரால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. முழங்கால் ஜீவியம், வேத வசனம், சுறுசுறுப்பு, ஊழியத் தீவிரம், சகோதர சிநேகம், எவருக்கும் உதவும் பாச உள்ளம், சிறியோர், பெரியோர் அனைவருக்கும் சம அன்பு என்று வசனங்களையே வாழ்வின் எல்லையெங்கிலும் பிரதிபலித்தார்கள். தனது 73 ஆம் வயதில் பானபலியாய் வார்க்கப்பட்டார்கள்.

அண்ணன் அவர்களது துணைவியார் **திருமதி. ஆனந்த ஜெபசிங்** அவர்களுக்காக, மூன்று பிள்ளைகள் – **திருமதி. டென்னிசா டேவிட்சன், திருமதி. சாலினி பத்ராஸ், திரு. ஆண்ட்ரூ ஜெபசிங்** ஆகியோரின் குடும்பங்களுக்காக, விஷ்வவாணியின் 3105 முழுநேர ஊழியர்களின் ஆறுதலுக்காக, இப்பணியின் பங்காளர்கள் அனைவருக்கும் இழப்பினால் வாடும் இதயங்களுக்கும் சகல ஆறுதலின் தேவன் இரங்குவாராக!

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



- ✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.
- ✞ இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் சுமார் 5000 பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100/–. 5000 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.
- ✞ பணித்தளத்தில் செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்**, அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் சந்திக்கப்படவும், இதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **08.02.2014,** *சனிக்கிழமை* | *மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை* |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

**அனைவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிப்பதுடன், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.**

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 11

**பதில் எழுதுக :**

1. கர்த்தர் மோசேயை யாருக்குத் தேவனாக்கினார்?
2. எது கர்த்தருக்குப் பிரியம் என்று பிலேயாம் கண்டான்?
3. "கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்" இருப்பிடம் கூறுக.
4. யோசுவா சூரியனைத் தரித்து நிற்கச் சொன்ன இடம் எது?
5. லீபனோனைப் போல் வேரூன்றி நிற்பவன் யார்?
6. வீட்டைப் பார்க்கிலும் அதிகக் கனத்துக்குரியவன் யார்,
7. கர்த்தருடைய பரிசுத்தன் யார்?
8. யாபீனின் சேனாதிபதி யார்?
9. மெரிபால் யாருடைய குமாரன்?
10. ஞாபகப்புஸ்தகம் யாருக்காக எழுதப்பட்டிருக்கிறது?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **18.02.2014**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. யோசுவா 11 :9
2. அவர்கள் முடி. (நீதி. 14:24)
3. கர்த்தருடைய நாள். (ஒபதியா 1:15)
4. எப்புன்னேயின் குமாரன். (எண். 14:30)
5. ரூபன். (1 நாளா. 5:1)
6. (1) சாந்தகுணமுள்ளவர்கள். (மத். 5:5) (or) (2) கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் (சங். 37:9)
7. அஞ்ஞானிகளைப் போல. (மத். 6:7)
8. லூக்கா 1 : 45
9. அக்சீபின் வீடுகள். (மீகா. 1 : 14)
10. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்த போது.(லூக். 2:2)

**கடந்த மாத வேத வினாப் போட்டி 10 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 19 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. ராணி திரவியம்,** கோயம்புத்தூர். **2. Sis. லில்லியன் ஜோசப்,** புதுடெல்லி

**3. Sis. ஜாஹின் ஜூலியா,** மார்த்தாண்டம்

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

ICICI Bank **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,***

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

**Axis** வங்கிக் கணக்கு எண் : **105010100096779 - Tuticorin Branch**

**TMB** வங்கிக் கணக்கு எண் : **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்

மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பையிலிருந்து டேஹராடூனிற்குச் சென்று கொண்டிருந்த டெராடூன் எக்ஸ்பிரஸ் ரயிலின் மூன்று பெட்டிகளில், இந்திய நேரப்படி விடியற்காலை 2.30 மணிக்கு தீ பிடித்தது. இதில் சிக்கி ஒரு பெண் உட்பட 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிரன்ஞ் கியானாவில் இருந்து கயா என்னும் விண் தொலைநோக்கி வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது. இது சுற்றுவட்டப்பாதையை அடைந்தபின் அங்கிருந்து பால்வெளி நட்சத்திரக் கூட்டத்தை முப்பரிமாணத்தில் படம்பிடித்து முன்னெப்போதும் இல்லாத வகையில் அதன் வரைபடங்களைத் தரும். கோடிக்கணக்கான நட்சத்திரங்களின் நகர்வை அளந்து, அது அந்த வரைபடத்தைத் தயாரிக்கும்.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இரண்டு தனித்தனி வெடிகுண்டுத் தாக்குதலில் குறைந்தது இருபது பேர் கொல்லப்பட்டுள்ளனர். முதலாவது குண்டுத் தாக்குதல் கிறிஸ்துமஸ் வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்கள் தேவாலயத்தைவிட்டு வெளியே வரும்போது நடைபெற்றது. அதில் 14 பேர் கொல்லப்பட்டனர். இரண்டாவது குண்டு பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் வசிக்கும் ஒரு பகுதிக்கு அருகிலுள்ள ஒரு திறந்தவெளிச் சந்தையில் வெடித்துச் சிதறியது. இந்தத் தாக்குதலில் 20 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

உலகில் புகைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 100 கோடி என்ற அளவுக்கு உயர்ந்துவிட்டதாகப் புதிய புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. ரஷ்யா மற்றும் இந்தோனேஷியா போன்ற சில நாடுகளில் பாதிக்கும் அதிகமான ஆண்கள் தினமும் புகை பழக்கத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள்.

நன்றி : www.bbc.co.uk


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## ஷாலோம் கிராம ஆலயம்

# கஹூடா

### மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டத்தில் உள்ளடங்கிய கிராமம்தான் கஹூடா. இந்தக் கிராமமும் இதைச் சுற்றியுள்ள கிராமங்களும் அதிகமான பனை மரங்களால் நிறைந்த பகுதிகளாகும். இங்குள்ள ஜனங்களுக்கு "பனங் கள்ளினை" இறக்குவதும் விற்பதுமே தொழிலாகும். மேலும் கள்ளினைக் குடித்து, வெறித்து, சண்டையிட்டு சமாதானமின்றி காணப்படும் ஜனங்கள் இவர்கள். இந்தச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தவர்தான் சகோ. இம்மத் சிங் சங்காடா. இவரது மனைவி கை, கால், உடம்பு வலி மற்றும் வீக்கம் ஏற்பட்டு வேதனையினால் மிகவும் கஷ்டப்பட்டார். மருத்துவத்திற்கே ரூ. 40 ஆயிரம் வரை செலவு செய்தும் இவரது நோய் குணமாகவில்லை. இந்தச் சூழ்நிலையில் 2003 ஆம் ஆண்டு ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. நவல் கராடியா அவர்களைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரிடம் ஜெபிக்கும்படியாகச் சென்றனர். ஊழியரும் இவர்களுக்காகப் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் இவர்களுக்கு அற்புதமான சுகத்தினைக் கொடுத்தார். இந்த அற்புதத்தைப் பெற்றுக் கொண்ட இவர்கள் குடும்பமாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.

இதன் பின் மூன்று ஆண்டுகள் அவருடைய சபையில் விசுவாசிகளாக இருந்து வந்தனர். அதன்பின் ஆண்டவர் அவரை ஊழியத்திற்கு அழைக்கவே குடும்பமாக ஊழியத்திற்கென்று ஒப்புக் கொடுத்து, 2007 ஆம் ஆண்டு ஷாலோமில் குறுகிய கால வேதாகமப் பயிற்சியினைப் பெற்று, தனது சொந்த கிராமத்தினை மையமாக வைத்து தனது இல்லத்தில் ஊழியத்தினை ஆரம்பித்தார். ஆத்துமாக்கள் அதிகரிக்க இல்லத்தில் இடம் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆகையால் தனது சொந்த நிலத்தினை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தரவே அந்த இடத்தில் ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, 25.12.2013 கிறிஸ்துமஸ் நாளன்று அன்று **சகோ. டக்லஸ் ஆண்ட்ரூ** (M.C.C.) அவர்கள் மூலமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போது இந்த சபையில் 25 குடும்பத்தினர் தேவனை ஆராதித்து வருகின்றனர்.

இந்தக் கிராம ஆலயம் குளத்துக்குடியிருப்பு, CSI **தூய யோவான் ஸ்நானகன் ஆலயத்தின்** மூலம் **சகோ. அற்புதராஜ்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூ. 2 லட்சம் மூலம் கட்டப்பட்டதாகும். தேவனுக்கே மகிமை!

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில்
இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க
முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

நாகர்கோவிலில்

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை

| நாள் | நேரம் |
| --- | --- |
| **16.02.2014 ஞாயிறு** | **மாலை 6.30 மணி** |

இடம்

**Home Church, Men's Fellowship Hall**

நாகர்கோவில்

*மிஷனெரி செய்தி :*

**பேராயர். V. தேவதாஸ்**

ஷாலோம் ஊழியங்கள், குஜராத்



- மகிமையான பாடல் மற்றும் ஆராதனை...
- முரட்டாட்டமாய் வாழ்ந்த ஜனங்களின் சாட்சிகள்...
- மிஷனெரி பிரதிஷ்டை வேளை...
- வீடியோ படக்காட்சிகள்..
- அனல் மூட்டும் தேவனுடைய வார்த்தை...

சபை பாகுபாடின்றி அனைவரும் பங்கு பெற்று
தேவாசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம்...

**SHARING LOVE MISSION**

Bro. P. ஜார்ஜ், Cell : 98944-78405, Bro. சுந்தர் ராஜ், Cell : 94433-70830
Bro. G. செல்வதுரை, Cell : 94876-89869, Bro. ஜாண் ஸ்ரீதர், Cell : 93446-75468